ISSN 1391-9504

Vijey விஜய்

# விஜய்

01.07.2015 - மலர் 12, இதழ் 18



## தீவிரமாகப் பரவிவரும் AH1N1 காய்ச்சல்



## ஓட்டுனர் இல்லாத சுரங்க ரயில்...!

விலை ரூபா 15/-




## பனித்தட்டு உடைந்து கடல் மட்டம் உயரும் அபாயம்



## முகத்தை மாற்றும் கணினி 'ஃபேஸ்ரிக்' முறை

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1. இந்த இடம் குறிப்பது;

   1. பூங்காவனம்
   2. விலங்கினக்காட்சிசாலை
   3. காடு

2. இங்கு நீங்கள் காணக்கூடிய சில விலங்குகளின் பெயர்களைக் குறிப்பிடுக.


   ..........................................................

3. கொடிய விலங்குகள் சிலவற்றின் பெயர்களைத் தருக.

   ..........................................................

4. படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு குளத்தில் இடப்பட்டுள்ள விலங்கினங்கள் எவை?

   ..........................................................



1. படத்தில் நீளமான கட்டம் எந்த நிறத்தில் காணப்படுகின்றது?

   ..........................................................

2. நீளமான கட்டத்திலிருந்து குறுகிய கட்டம்வரை நிறங்களை முறையே வரிசைப்படுத்துக.

   ..........................................................


3. நீல நிறத்தையும் சிவப்பு நிறத்தையும் கலந்தால், பெறப்படும் நிறம் யாது?

   1. சிவப்பு  2. ஊதா  3. கறுப்பு

4. எமது சூழலில் நீல நிறத்தில் காணக்கூடிய விடயங்கள் 2 தருக.

   ..........................................................



1. படத்தில் எத்தனை முயல்குட்டிகள் உள்ளன?

   ..........................................................

2. முயல்குட்டிகள் விரும்பி உண்ணும் மரக்கறி வகையொன்று படத்தில் காணப்படுகின்றது. அது என்ன?

   ..........................................................

3. முயல்கள் பற்றி 3 வாக்கியங்கள் எழுதுக.

   1. ..........................................................
   2. ..........................................................
   3. ..........................................................

இங்குள்ள காட்சிகள் இடம்பெற வேண்டிய ஒழுங்குமுறையை 1, 2, 3, 4 என முறையே இலக்கமிட்டுக் காட்டுக.





-ஜீறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

# ஐஃபள் கோபுரத்தினைவிட உயரமான

# அமேசன் கோபுரம்


அமேசன் காட்டுக்கு மத்தியில் அமைந்துள்ள கண்காணிப்புக் கோபுரம்



உலகின் மிகவும் பெரிய மழைக்காடு அமேசன் மழைக்காடாகும். இந்த மழைக்காடு பல உயிரினங்களினதும் தாவர இனங்களினதும் இருப்பிடமாக இருக்கின்றது. இதுவரை முழுமையாக ஆய்வு செய்யப்படாத இந்த மழைக்காட்டில், இன்றும்கூட கண்டறியப்படாத பல தாவரங்களும் உயிரினங்களும் இருக்கின்றன என்றே கூறப்படுகின்றது. அமேசன் மழைக்காட்டை வளப்படுத்தும் நதியாக அதனை ஊடறுத்துப் பாயும் அமேசன் நதி திகழ்கின்றது. உலகில் உள்ள மிக நீளமான நதிகளுள் அமேசன் நதியும் ஒன்றாகும்.


இவ்வாறெல்லாம் உலகப் புகழ்பெற்ற இடமாக விளங்கும் அமேசன் மழைக்காட்டுப் பகுதியானது, அண்மையில் மற்றுமொரு விடயத்திற்காக உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. இங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு கோபுரத்தின் காரணமாகவே, இக்காட்டுப் பகுதி பற்றி பேசப்படுகின்றது. அதாவது, அமேசன் மழைக்காட்டின் மத்திய பகுதியில் உலகின் உயரமான கோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652


கோபுரத்தின்கீழ் இருந்தவாறு தரவுச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள்

இதற்கு 'அமேசன் கண்காணிப்புக் கோபுரம்' என்று பெயரிட்டுள்ளனர். இந்த அமேசன் கோபுரமானது, பிரான்ஸின் ஐஃபள் கோபுரம், லண்டனின் த ஷார்ட் மற்றும் நியூயோர்க்கின் லிபர்ட்டி சிலை போன்றவற்றை விட உயரமானது என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கோபுரத்தின் உயரம் 325 மீற்றர் (1,066 அடி) ஆகும். வளிமண்டலம் குறித்த புதிய தரவுகளைப் பெறும் நோக்கிலேயே இந்த கோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அமேசன் காட்டின் மத்திய பகுதியின் உயரமான இடமொன்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த கோபுரத்தின்மூலம் வளிமண்டல மாற்றங்களை சிறப்பாகக் கண்காணிக்கலாம் எனக் கருதப்படுகின்றது. மேலும், இந்த கோபுரத்தினை பராமரிக்கவும் கண்காணிக்கவும் என்றே அங்கு ஆய்வுக்குழு ஒன்று பணியில் அமர்த்தப்பட்டுள்ளது.




பசுமைவீட்டு வாயுக்கள், காலநிலை மாற்றங்கள், வளியில் பரவியுள்ள மிகவும் சிறிய துணிக்கைகள் என்பன குறித்து இந்த கோபுரத்தின் உதவியுடன் தரவுகள் பெறப்படுகின்றன. இந்த கண்காணிப்புக் கோபுரத்தின்மூலம் பெறப்படும் தரவுகள், எதிர்கால காலநிலை மாற்றங்கள் குறித்து சட்டதிட்டங்களை வகுத்து, அதற்கமைய, செயற்படுவதற்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

- அஷ்விதா

## வரலாற்றில் இந்த நாள்...




### ஜூலை - 02

- 1823 ஆம் ஆண்டு: பிரேஸிலில், போர்த்துக்கேய ஆட்சி முடிவுக்கு வந்தது.
- 1964 ஆம் ஆண்டு: அமெரிக்காவில் அனைத்து இன மக்களுக்கும் சமவுரிமை அளிக்கும் சிவில் உரிமை சட்டத்தில், ஜனாதிபதி லிண்டன் ஜோன்ஸன் கையெழுத்திட்டார்.

### ஜூலை - 03

- 1778 ஆம் ஆண்டு: ஒஸ்ட்ரியா மீது புருசியா யுத்தப் பிரகடனம் செய்தது.
- 2006 ஆம் ஆண்டு: பூமியில் இருந்து 432,308 கி.மீ. தூரத்தில் 2004 XP14 என்ற சிறுகோள் பயணித்தமை அவதானிக்கப்பட்டது.





### ஜூலை - 04

- 1810 ஆம் ஆண்டு: நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டேம் நகரை, பிரான்ஸ் கைப்பற்றியது.
- 1946 ஆம் ஆண்டு: 381 வருடங்களாக பல நாடுகளின் காலனித்துவ நாடாக இருந்த பிலிப்பைன்ஸ், அமெரிக்காவிடமிருந்து பூரண சுதந்திரத்தைப் பெற்றது.



### ஜூலை - 05

- 1811 ஆம் ஆண்டு: ஸ்பெய்னிடமிருந்து வெனிசுவெலா சுதந்திரம் பெற்றது.
- 2004 ஆம் ஆண்டு: இந்தோனேஷியாவின் முதலாவது ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டது.



### ஜூலை - 06

- 1785 ஆம் ஆண்டு: அமெரிக்காவின் நாணய அலகாக 'டொலர்' ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டது.
- 1885 ஆம் ஆண்டு: விசர்நாய்க்கடிக்கு எதிரான தடுப்பு மருந்தை லூயி பாஸ்ச்சர் வெற்றிகரமாக சோதித்தார்.



### ஜூலை - 07

- 1543 ஆம் ஆண்டு: லக்ஸம்பர்க் மீது பிரான்ஸ் படையெடுத்தது.
- 1937 ஆம் ஆண்டு: சீனாவின் பீஜிங் நகரம் மீது ஜப்பானிய துருப்புகள் படையெடுத்தன.

-ஶ்ரீ.இஸ்ரத் இந்தியாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாஞ்சோலை மர்மங்கள்! 20

ஜெ.வீபாகர்

## முதல் பலி யார்...?



“யாரைப் பலி கொடுக்கப் போகின்றீர்கள்...?”

“தம்பிக்கு ரொம்ப ஆர்வம் போல இருக்கு... உன்னையே பலி கொடுக்கலாமே... என்ன? சம்மதமா?”

ராகேஷுக்கு ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டோம் என்று ஆகிப்போனது.

“என்ன இருந்தாலும் உங்கள் தைரியத்தைப் பாராட்டியே ஆகணும். ஆனால், பெரியவர்களிடம் எதுவும் சொல்லாமல் இருந்ததால்தான் இப்போது அநியாயமாக மாட்டிக்கொண்டு முழிக்கிறீர்கள்...!”

கோகுல் வாளுடன் வந்தான். சிறிய மெழுகுவர்த்தி ஒளியிலும் தகதகவென மின்னியது அந்த வாள். இப்போதுதான் அதை முதல் முறையாக நேரில் பார்க்கிறார்கள். ஆனால், இதுவே கடைசியாகவும் அமையலாம்...! வாளைக் கையில் வாங்கினார் முருகேசு.

“யார் முதல் முதலாக ராஜாவுக்கு பலியாகப் போகிறீர்கள்...?”

ராகேஷின் அருகே சென்றார். அவன் பயத்தில் நடுங்கினான்.

“எங்களை விட்டுவிடுங்கள். நாங்கள் போகிறோம். உங்களைக் காட்டிக்கொடுக்க மாட்டோம்...”

“உன்னால் எங்களுக்கு அவ்வளவாகத் தொல்லை இல்லை. உன்னைக் கடைசியில் பார்த்துக்கொள்ளலாம்...” என்று, அவனிடமிருந்து விலகி, திவாகர் அருகே சென்றார். “ம்ம்ம்... மறைந்திருந்து பார்க்கிறது, காட்டுக்கு வழி காட்டியது, இந்த வீட்டைப் பற்றிச் செய்தி சொன்னது, எல்லாமே நீ தானே...!? உன்னை முதலில் முடிக்கலாம்....” அப்படியே வினோத்தைப் பார்த்தார்.

“சந்தேகம், யோசிக்கிறது, திட்டம் போடுறது... எல்லாவற்றுக்கும் பின்னால் இருந்தவன் நீதான். மூல காரணமான உன்னைத்தான் முதலில் பலியாக்க வேண்டும், அத்தோடு, ஊரில் விசாரித்துப் பார்த்தேன். நீ மன்னனைக் கொன்றவர்களின் பரம்பரையாமே... அப்படி என்றால், நீதான் பொருத்தமாக இருப்பாய்.”

ஐயையோ... இவருக்கும் உண்மை தெரிந்துவிட்டதா...? போச்சு! அப்படி என்றால் நிச்சயமாக அவன்தான் முதல் பலி. பதறிப்போனான் வினோத். ஆனால், அந்த வார்த்தையை முழுதாக முடிக்கவில்லை. அதற்குள் படார் என ஒரு சத்தம் கேட்டது...! நால்வரும் அறை வாசலைப் பார்த்தனர். அங்கே நின்றுகொண்டிருந்த கோகுலைக் காணவில்லை.

“கோகுல்...! கோகுல்...!” என்று அழைத்தபடி வெளியில் சென்றார் முருகேசு. திரும்பவும் சத்தம். என்ன நடக்கிறது என்று புரியவில்லை. ஆனால், ஏதோ நடக்கிறது. யாரோ மோதிக்கொள்வது போல் ஒலி கேட்டது. மூவருக்கும் என்ன நடக்கிறதோ, என்கிற பதட்டம். சிறிது நேரத்தில், “வினோத்! ராகேஷ்! திவாகர்!” என்று யாரோ அழைத்தபடி சிலர் அறையினுள் நுளைந்தனர். அவர்கள் கையில் பிரகாசமான மின் சூள்கள் இருந்தன. அவர்களைப் பார்த்த மூவரும் மகிழ்வடைந்தனர்.

“நாங்க பொலிஸ். பயப்படாதீங்க. அவர்களைப் பிடித்துவிட்டோம். இனி எந்த ஆபத்தும் இல்லை...” என்று கட்டுகளை அவிழ்த்துவிட்டனர். மூவருக்கும் மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. சிறிது நேரத்தில், அவர்கள் வெளியில் கொண்டு செல்லப்பட்டார்கள். மூவரதும் குடும்பத்தினர் வெளியில் இருந்தனர். அவர்களுக்கும் கொள்ளைச் சந்தோசம்! எல்லாம் இனிதே முடிந்தது. வினோத்தைப் பார்த்ததும் மிகவும் மகிழ்வடைந்தாள் திவ்யா. தங்கள் புதல்வர்களை, வாரி அணைத்துக்கொண்டனர் குடும்பத்தார்.

“நீ திவ்யாவுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். அவள்தான் இந்த வீட்டைப் பற்றிய தகவல்களை சொன்னாள். அதை வைத்துத்தான், பொலிஸார் திட்டம்போட்டு, மெதுவாக உள்ளே நுழைந்து உங்களைக் காப்பாற்றினார்கள்” என்றார் வினோத்தின் தாயார்.

வினோத், ராகேஷ், திவாகர் மூவரும் ஒருவரை ஒருவர் அணைத்துக்கொண்டனர். அவர்களின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் லேசாக உருவெடுத்தது. என்ன ஒரு அனுபவம்...! வாழ்நாள் முழுவதும் இதனை மறக்க முடியாது. முருகேசு, கோகுல் இருவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். மாஞ்சோலை ஊரின் மர்மங்கள் அதோடு நிறைவு கண்டன. எல்லா உற்சாகங்களும், கொண்டாட்டங்களும் முடிந்துபோக, அவரவர் தங்கள் வீடுகளுக்குப் பிரிந்து போயினர். வீடுகளுக்கு திரும்பும் முன், திவாகர், ராகேஷ், வினோத் மூவரும் கடைசியாக ஒரு தடவை பேசிக்கொண்டார்கள்.

“இந்த அனுபவத்தை என்னால் மறக்கவே முடியாது...! புல்லரிக்குது...” என்றான் திவாகர்.

“நாம் நினைத்த மாதிரியே எல்லாப் புதிர்களையும் தீர்த்துவிட்டோம்! அடுத்த சி.ஐ.டி வேலைக்குத் தயாரா..?” என்று கேட்டு, கண்ணடித்தான் வினோத்.

“அடுத்த சி.ஐ.டி. வேலையா? ஆளை விடுடா சாமி...! முதலில் போய் ஸ்கோர் என்னவென்று பார்க்க வேண்டும்” என்றான் ராகேஷ்.... (முற்றும்)

## கழுகும் நரியும்



ஓர் அடர்ந்த காட்டில் வேடன் விரித்திருந்த வலையில் கழுகு ஒன்று சிக்கிக்கொண்டது. அதைப் பிடித்த வேடன், சிறகுகளை மட்டும் வெட்டி சிறிய சங்கிலியால் அதனை கட்டிப்போட்டிருந்தான். அவ்வழியே வந்த பெரியவர் ஒருவர், அதன்மீது இரக்கம் கொண்டார். வேடனிடம் காசு கொடுத்து அந்தக் கழுகை வாங்கி, அதனை தன்னுடன் கொண்டு சென்று அன்புடன் வளர்த்தார்.

இறக்கைகள் நன்கு வளர்ந்ததும் அதைப் பறந்துபோக அனுமதித்தார். கழுகு பறந்து செல்லும்போது அதன் பார்வையில் ஒரு முயல் தென்பட்டது. கழுகு அதை அப்படியே தூக்கிச் சென்று தன்னை வளர்த்த பெரியவரிடம் காணிக்கையாகக் கொடுத்தது. இதைக் கவனித்துக்கொண்டிருந்த நரி, கழுகைப்பார்த்து

“ஏற்கனவே உன்னைப் பிடித்த வேடன் மறுபடியும் உன்னைப் பிடிக்கலாம். இந்த முயலை நீ அந்த வேடனிடம் கொடுத்திருந்தால், மறுபடியும் அவன் உன்னைப் பிடிக்காமல் விட்டிருப்பான். பெரியவருக்கு நீ முயலைக் கொடுத்தாலும், கொடுக்காமல் இருந்தாலும் அவர் உன்னைப் பிடிக்க வரப்போவதில்லை. அதனால், நீ எதற்காக இப்படிச் செய்தாய்” என்று கேட்டது நரி.

அதற்கு முயல் “நரியாரே, நீர் கூறுவது தவறு. வேடனிடம் நான் முயலைக் கொடுத்தாலும், பிற்காலத்தில் அவன் என்னை வலைவிரித்துப் பிடிக்கலாம். ஆனால், நான் ஆபத்தில் இருந்தபோது என்னைப் பெரியவர் காப்பாற்றியுள்ளார். அவரிடம் நான் கொண்டுள்ள நன்றியையும், விசுவாசத்தையும் வெளிப்படுத்தவே முயலைக் காணிக்கையாகச் செலுத்தினேன். உதவி செய்தவரிடம் நன்றியோடு இருப்பதுதான் பண்புள்ள செயல்” எனப் பதில் கூறியது கழுகு.

**கதையின் நீதி: ஆபத்துக் காலங்களில் உதவி செய்தவர்களை மறக்காமல் நன்றியோடு இருப்பதுதான் நல்லவர்களுக்கு அழகாகும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகள் செய்திகளை வழங்கும்போது, சில சந்தர்ப்பங்களில் உள்ளதை உள்ளபடியே கூற முடியாத சூழ்நிலை இருப்பதுண்டு. இது ஒரு நாட்டின் ஆளும் வர்க்கத்தினரின் மேலாதிக்கம் காரணமாக நடைபெறலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பத்திரிகைகள் வழிமுறைகளை கையாள்வதுண்டு. இருப்பினும், அதுவே காலப்போக்கில் வாசகர்களின் அதிருப்திக்கு உள்ளாகி பத்திரிகை விற்பனையைக் கூட பாதிப்பதாக அமைந்துவிடும். இத்தகைய செயல்கள் பத்திரிகை விற்பனையை பாதிப்பதனால், அது குறித்த சில விபரங்களை ஆராய்வது நல்லது.

அதாவது, வாசகர்கள் எப்போதும் நம்பிக்கையை ஏற்படுத்தும் செய்திகளை வழங்குதல், அதிகப்படியான எதிர்பார்ப்புக்களை தூண்டும் விதமான செய்திகளை வழங்குதல், ஏதோ நமக்கும், நமது சமூகத்திற்கும் மட்டும் பெரிதாக தனிப்பட்ட ஒரு நன்மை கிடைக்கப்போவது போல் செய்தியை அமைத்தல், எல்லாமே நமக்கு சாதகமாக அமையப் போகின்றது போல் செய்திகளை செய்வதற்கான ஒரு தந்திரோபாயமாக, சூட்சுமமாக இதனைக் கையாள்வதுண்டு.

ஆனால், எதிலும் காலம் பதில் சொல்லும் என்பதற்கிணங்க காலப் போக்கில் யதார்த்த சூழ்நிலையில் நடக்கின்ற சம்பவங்கள் உண்மையை நிஜத்தை மக்களுக்கு அனுபவபூர்வமாக உணர்த்தும் காலம் வருவதுண்டு. இதன்போது, தமது நீண்டகால எதிர்பார்ப்புக்கள், நம்பிக்கைகளை தகர்ந்த

# வீண் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தி வாசகர்களை வெறுப்பெற்றல் கூடாது...!






உருவாக்குவதும், நடப்புக்கள் அனைத்துமே சாதகமாக அமைவதாக சுட்டிக் காட்டுதல் என பல்வேறு வகைகளில் இவ்வாறான செய்திகள் வழங்கப்படுவதுண்டு.

உண்மையில் இவ்வாறு செய்திகளை வழங்கும் போது, பத்திரிகைகள் மீது கொண்டுள்ள அபிமானத்தின் காரணமாக வாசகர்கள் அவற்றை முற்று முழுதாக நம்பிவிடுவதுண்டு. இதனை தமக்கு சாதகமாகப் பயன்படுத்துகின்ற பத்திரிகைகள் Follow Up News அதாவது, செய்திகளின் நீட்சி எனும் பெயரில் நாளுக்கு நாள் குறித்த விடயம் தொடர்பில் நடக்காத அல்லது நடக்க முடியாத சில கற்பனைகளையும் கலந்து எதிர்பார்ப்பைத் தூண்டும் தொடர்கதை வடிவில் செய்திகளை வழங்கி, வாசகர்களை தொடர்ந்து பத்திரிகைகளை வாங்கச் உணர்வையோ அல்லது அத்தகைய எதிர்பார்ப்பை நம்பிக்கையை ஊட்டிய பத்திரிகைகள் நம்மை ஏமாற்றி விட்டன என்றோ வாசகர்கள் வெறுப்புணர்வைக் காட்டும் நிலைக்கு அவர்கள் தள்ளப்படுவர்.

இத்தகைய ஏமாற்ற உணர்வானது, குறித்த ஒரு சமூக ரீதியில் ஏற்படும்போது அந்த ஏமாற்றமானது பத்திரிகைகள் மீதான ஒட்டுமொத்த வெறுப்பாக மாறிவிடக் கூடிய ஆபத்துக்கள் உள்ளன. இத்தகைய வெறுப்பானது பத்திரிகைகள் மீது வாசகர்கள் கொண்டுள்ள ஈடுபாட்டை, அபிமானத்தை குறைத்துவிடக்கூடிய ஏதுநிலைகள் இருப்பதனால், இது நேரடியாகவோ, மறைமுகமாகவோ பத்திரிகை விற்பனைகளில்கூட தாக்கத்தினை, சரிவினை ஏற்படுத்திவிடலாம். ஆகையால், தமது இருப்பை தக்க வைத்துக்கொள்ள விரும்புகின்ற எந்தவொரு பத்திரிகையும் வசகர்களுக்கு ஏமாற்றத்தை வழங்குபவையாக இருத்தல் கூடாது.(தொடரும்)

எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற ஒரு வரைவிலக்கணத்தை அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். அதாவது, உள்ளதை உள்ளபடி கூற முடியாதிருக்கின்றது என்பதற்காக, வாசகர்களை ஈர்ப்பதற்கு மாற்று வழிகளை பத்திரிகைகள் தேடுவதுண்டு. இப்படியான சந்தர்ப்பங்களில் ஆரோக்கியமான மாற்று வழிகளைக் கையாளுவதில் தவறு இல்லை.

ஆனால், சிலரோ, பத்திரிகை விற்பனையில் சரிவு ஏற்படக்கூடாது என்பதற்காக சூட்சுமமான சில பத்திரிகைகள் மீது முழு நம்பிக்கை வைத்தே பத்திரிகைகளை விலைகொடுத்து வாங்குகின்றனர் என்பதை முதலில் உணர வேண்டும். எனவே, அதற்கு துரோகம் இழைப்பதாக பத்திரிகைகள் நடந்து கொள்ளக்கூடாது. குறிப்பாக, செய்திகள் எனும் பெயரில் வாசகர்களுக்கு அரசியலில் மிதமிஞ்சிய

-ரிஷபன்



## கொஞ்சம் சிரிப்போம்...!



* என் தம்பி சரியான புத்தகப் பைத்தியம்...!
* ஏன் எப்பவும் புத்தகமும் கையுமாக இருப்பானா...?
* நீ வேற... அவன் புத்தகத்தை வெச்சுக்கிட்டு என்ன நெளி நெளியிறான் தெரியுமா?



* டேய் படிக்காமலே நான் 10 மார்க் வாங்குவேன்டா!
* எப்படி? நீ தான் பரீட்சையில் ஒன்னுமே எழுத மாட்டியே?
* ஆமாம்...
* எழுதினாத்தானே பேப்பர் கசங்கும், பேப்பர் நீட்டா இருந்தா 10 மதிப்பெண் தர்றதா நம்ம டீச்சர் சொல்லியிருக் காங்களே...?




* உங்க நீளமான கூந்தலுக்குக் காரணம்
* காலையில் எழுந்ததும் ஷாம்பு போட்டுக் கழுவுவேன். மாலையில் எண்ணெய் வைப்பேன்...
* அப்போ இரவில்...?
* ரொம்பத் தொல்லையாய் இருந்தா கழட்டி ஆணியில் மாட்டிடுவேன்.

## தெரிந்து கொள்வோம்

* பொருளாதாரத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

எடம் ஸ்மித்





* சிவப்பு எறும்பின் கொடுக்கில் அமைந்துள்ள அமிலம் எது?

பாரமிக் அமிலம்



* ஆசியாவில் முதன் முதலாக தொழில்மயமான நாடு எது?

ஜப்பான்

* மூலதனம் (Das Kapital) என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?

கார்ல் மார்க்ஸ்





* வௌவால் ஏற்படுத்தும் ஒலி எது?

மீயொலி

* காளானில் இருந்து தயாரிக்கப்படும் மருந்து எது?

பென்சிலின்



* மனிதன் ஓர் அரசியல் மிருகம் எனக் கூறியவர் யார்?

அரிஸ்டோட்டில்



* லட்சத்தீவில் அதிகம் பேசப்படும் மொழி எது?

மலையாளம்

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினியில் வரும் புதிய நண்பர்கள்

இந்த புதிய மென்பொருளினால் ஜப்பானிய கார்ட்டூன் கதாபாத்திரமான மங்கா முதல் கொம்புள்ள அரக்கன் வரை எந்தவொரு கதாபாத்திரமாகவும் மாறி உரையாட முடியும்.

புதிய கணினி 'புரோகிராம்' ஒன்று வரவுள்ளது. அதன்மூலம் ஸ்கைப் செய்வதுடன், உங்கள் நண்பர்களை வியப்பில் ஆழ்த்தவும் முடியும். வியப்பூட்டும் மாறுவேடத்தின் ஊடாக இந்த இன்ப அதிர்ச்சியினை நீங்கள் பகிரலாம்.

இந்த கணினி நிகழ்ச்சியின்மூலம் ஸ்கைப்பில் உரையாடிக்கொண்டே உங்களை விரும்பிய மாறுவேடத்தில் மாற்றிக்கொள்ள முடியும். அதாவது, சிவப்பு பெண்டா கரடி தொடக்கம் கொம்புள்ள ராட்சதன் வரையும் அல்லது உங்களுக்கு விருப்பமான தொலைக்காட்சி திரைப்பட நடிகர்களாகவும் இந்த மாறுவேடத்தினை இட்டுக்கொள்ள முடியும். நீங்கள் அவ்வாறு தெரிவுசெய்யும் உருவத்துடன் உங்கள் நடத்தைகளையும் அங்க அசைவுகளையும் பொருத்திக்கொள்ளவும் முடியும்.

## ஃபேஸ்ரிக்

இதன்படி வெகுவிரைவில் ஸ்கைப் மற்றும் நேரடி தொடர்பாடல் இதர வலையமைப்புகளில் இந்த புதிய அனுபவத்தினை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும். எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் உலகம் முழுவதும் இதனை பிரபல்யப்படுத்த ஏற்பாட்டாளர்கள் தயாராகி வருகின்றனர். இதன் கணினி ப்ரோக்கிராமினை 'ஃபேஸ்ரிக்' (FaceRig) என்று அழைக்கின்றனர்.

இந்த ஃபேஸ்ரிக் மென்பொருளில் குறிப்பிட்ட நபரின் முகத்தில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் தலை அசைவுகள் என்பனவற்றை உள்ளடக்கிக்கொள்ள முடியும். அத்துடன், அதனைப் பயன்படுத்துபவரின் விருப்பிற்கு ஏற்ப, முப்பரிமாண உருவத்தினை நேரடிமயப்படுத்தத் தேவையான தரவுகளையும் சேகரித்துக் கொள்ள அவற்றால் முடியும்.

அதுமட்டுமன்றி, மேலும் இந்த மென்பொருள் சாதாரண வெப்கெமராவாக பயன்படுவது மட்டுமன்றி, அதில் வீடியோ 'செட்டிங்' சேவைகளின் வீடியோக்களுடன் இணைந்து கொள்ளவும் மேலும் இணையத்தளங்களில் உள்ள விளையாட்டுக்களில் இணைந்து கொள்ளவும் முடியும். பயன்படுத்துபவர் அதன் குரலை மாற்றிக்கொள்ளவும், கொரோக்கியாக மாற்றிக்கொள்ளவும் முடியும்.

## டிஜிட்டல் நடிகன்

பயன்படுத்துபவர்கள் தமது விருப்பத்திற்கு ஏற்ப பின்னணியினையும், தோற்றத்தினையும் மாற்றிக்கொள்ள முடியும். முன்னர் குறிப்பிட்டது போன்று ஜப்பானிய பாடசாலை மாணவியாகவோ, செந்நிற பெண்டா கரடியாகவோ, கொம்புகள் கொண்ட அரக்கனாகவோ விருப்பமான கதாபாத்திரத்தினை தெரிவு செய்து அந்த கதாபாத்திரமாக மாறிக்கொள்ள முடியும்.

இத்தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துபவருக்கு திரைப்படத்தில் டிஜிட்டல் நடிக நடிகையாகவும் மாற வாய்ப்புள்ளது. இங்குள்ள கதாபாத்திரங்கள் ருமேனியாவில் உள்ள 'புக்காரஸ்ட்' நகர கணினி விளையாட்டுக்களை உருவாக்கும் ஐந்து நிறுவனங்களினால் உருவாக்கப்பட்டவை ஆகும். இதனால், இலகுவாக கணினியினூடாக ஸ்கைப் தொழில்நுட்பத்தினூடாகவும் வேறு சேவைகளினூடாகவும் இதனை பயன்படுத்திக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கின்றது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இதனை விற்பனை செய்ய ஆரம்பித்தவுடன், 5 டொலர் பெறுமதிக்கே விற்பனை செய்யப்படவுள்ளது. பின்பு இதன் விலையை அதிகரிப்பதற்கு தய... பாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

உலகில் முதல் தடவையாக பரந்தளவில் சந்தைக்கு இவ்வாறு உணர்வுகளையும் அசைவுகளையும் தரக்கூடிய மென்பொருளை அறிமுகப்படுத்த முடிந்தமை குறித்து ஹொலோடெக் ஸ்டூடியோஸ் நிறுவனத்தினர் பெருமிதம் அடைந்துள்ளனர். இந்த புதிய மென்பொருளை ஸ்வீடனின் விஸாஜ் டெக்னோலொஜிஸ் (Visage Technologies) என்ற புதிய நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. இதற்கான நேரடி உருவக் காட்சியாக்கங்களை உங்களுக்காக மற்றுமொரு துணை நிறுவனமான ஹொலோடெக் ஸ்டூடியோஸ் (Holotech Studios) உருவாக்கியுள்ளது.











இதன் முதல் கட்ட மென்பொருளை 'வெப் செட்' முறைகளுக்கும் 'வெப்' விளையாட்டுக்களுக்கும் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன், அவற்றின் குரலை மாற்றிக்கொள்ளவும் பின்னணி ஒளி அமைப்புக்களை தமது விருப்பிற்கேற்ப மாற்றிக்கொள்ளவும் முடியும்.




தற்போது புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்த 'ஃபேஸ்ரிக்' மென்பொருளை பயன்படுத்தி எந்தவொரு பிரபல கதாபாத்திரமாகவும் நம்மை மற்றிக்கொள்ள முடியும். அந்த உருவத்திற்கு உங்கள் குரலை மட்டுமல்ல, உங்கள் அங்க அசைவுகளையும் கூட ஒரே விதமாக வழங்கி செயற்படுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆரம்ப ஏற்பாடாக இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையத்தினூடாக பண முதலீட்டினை மேற்கொள்வதற்கு மக்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. அதற்கமைய, கோரப்பட்ட 120,000 டொலருக்கு பதிலாக எதிர்பார்த்ததையும் விட மேலதிகமாக 211,615 டொலர்கள் சேர்ந்தன.

“தாம் விரும்பிய கதாபாத்திரத்துடன் டிஜிட்டல் முறையில் இணைந்துகொள்வதற்கு அனைவருக்கும் சந்தர்ப்பம் அளிக்கவே நாம் விரும்பினோம். முகம் மட்டுமன்றி, தலை முதல் கால்வரை வெற்றிகரமாக பின்பற்றக்கூடிய நேரடி ஹொலிவூட் பிக்சார் தரம் கொண்ட முறையை உருவாக்கவும், இணையத்தில் உருவம் மற்றும் ஒலியின் மூலம் பாவனையாளர்களுக்கு பதில் அளிக்கக்கூடிய முறையை உருவாக்கவுமே நாம் முயற்சித்துள்ளோம்” என்று இதன் உருவாக்குனர்கள் குறிப்பிடுகின்றனர்.

# ‘ஃபேஸ்ரிக்’

கணினி விளையாட்டுக்களை உருவாக்கும் சில நிறுவனங்கள் இதில் உதவியுள்ளன.

நேரடியாக நிகழும் விடயங்களை கெமராவில் படம் பிடித்து அதற்குத் தேவையான தரவுகளைப் பெற்று முப்பரிமாண மாதிரி வடிவத்தில் ஈடுபடுத்துவது உண்மையில் வியப்பூட்டும் விடயமாகும். அதற்கென விசேட க[illegible] மென்பொருள் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.


## முழு உடலிலும் அசைவுகள்

இந்த வியப்பூட்டும் தயாரிப்பினை மேற்கொள்ள பலவிதமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள நேர்ந்ததாக இத்தயாரிப்புடன் தொடர்புற்ற விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். மேலும் உயர்மட்ட விஞ்ஞானிகளும் தொழில்நுட்பக் கலைஞர்களும் இதற்குப் பங்களிப்பு செய்துள்ளனர். இதன் அடிப்படையிலேயே இந்த வியப்பூட்டும் படைப்பு உருவாகியுள்ளது. எதிர்வரும் காலத்தில் முக அசைவுகளுடன் மட்டும் மட்டுப்படாமல் முழு உடலையும் அசைவுபடுத்தக்கூடிய வகையில் இந்த மென்பொருளினை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் அறிமுகப்படுத்தப்படும் இந்த மென்பொருள் வீட்டுப் பயன்பாட்டுக்கு மட்டும் உரியதாயினும் எதிர்வரும் காலத்தில் வணிக ரீதியில் பயன்படுத்தக்கூடிய ஒரு மென்பொருளை உருவாக்கும் திட்டங்களும் உள்ளன.

இதனைப் பயன்படுத்த விரும்புபவர்கள் இந்த பெக்கேஜுக்குரிய மென்பொருளை இணையத்தில் இருந்து தரவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். அதன்பின் கணினியில் உள்ள வெப் கெமரா முன்பு அமர்ந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்த




இந்த புதிய மென்பொருளினால் ஜப்பானிய கார்ட்டூன் கதாபாத்திரமான மங்கா எனும் கதாபாத்திரமாகவும் மாறி உரையாட முடியும்.



இந்த 'ஸ்பேஸ்ரிக்' இராணுவ வீரரின் ஆவியானது மேற்படி 'வெப்' கெம் முன்னிலையில் உள்ளவருக்கு தன்னை ஓர் இராணுவ வீரராக மாற்றிக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கும்.

# பொது அறிவுடன் சமகால நிகழ்வுகள்

## நூல் அறிமுகம்




‘பொது அறிவுடன் சமகால நிகழ்வுகள்’ எனும் அறிவுப் பெட்டக நூலொன்றினை எழுதி வெளியிட்டுள்ளார் கலாபூஷணம் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப். உயர்தர மாணவர்கள், ஆட்சேர்ப்பு போட்டி பரீட்சைகள், சட்டக்கல்லூரி பரீட்சைக்கு ஆயத்தமாவோர், புவியியல் பொருளியல் அரசியல் வர்த்தக அரசியல், வர்த்தக பிரிவு பாட மாணவர்களின் தேவைகள், சமகால தரவுகளை சேகரிப்போரும், அண்மைக்கால அரசியல் மற்றும் அறிவியலுடன் பொது அறிவைத் தேடுவோருக்கும் ஏற்றவகையில் இந்த நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

இந்நூலின் ஆசிரியரான எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப் ஓவியக் கலை சம்பந்தமாக பல நூல்களை வெளியிட்டுள்ளார் என்பதுடன் பொது அறிவு சம்பந்தமான 16 நூல்களை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மாணவர்கள் மட்டுமன்றி, சகல தரப்பினருக்கும் பொது அறிவை வளர்த்துக்கொள்வதற்கு தேவையான ஏராளமான விடயங்களை இந்நூலில் தொகுத்து வழங்கியுள்ளமை பயன்மிக்கதாக அமைந்துள்ளது. 461 பக்கங்களைக் கொண்ட இந்நூல் அழகிய அட்டைப் படத்துடன் தரமான தாளில் அச்சிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**நூலின் விபரங்கள்:**

**தலைப்பு:** பொது அறிவுடன் சமகால நிகழ்வுகள்

**ஆசிரியர்:** கலாபூஷணம் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

**விலை:** ரூ 495.00

**வெளியீடு:** உடுநுவரை கலைவட்டம்

**தொடர்புகளுக்கு:** 0777911091

# செலிங்கோ ரன் தரு கல்விச் சுற்றுலா..!

செலிங்கோ லைஃப் ஏற்பாட்டில் இலங்கையின் சகல மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் 600 பிள்ளைகளை கொழும்பு நகரிலுள்ள பிரசித்தி பெற்ற முக்கிய இடங்களை காண்பிக்க அழைத்துச் செல்லும் கல்விச் சுற்றுலா இரண்டாவது வருடமாக இம்முறையும் நடைபெற்றது. ‘செலிங்கோ ரன் தரு’ சுற்றுலாப் போட்டியில் வெற்றியீட்டிய சிறுவர்களுக்கு இந்தச் சுற்றலாவில் கலந்துகொள்வதற்கான வாய்ப்புக் கிட்டியது.




பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபம், இன்டிபென்டன் ஆர்க்கேட், சுதந்திர சதுக்கம் மற்றும் தாமரைத் தடாக அரங்கம் ஆகியவற்றை நேரில் கண்டுகளிக்கும் வாய்ப்பு இவர்களுக்கு வழங்கப்பட்டது.

நிரப்பப்பட்ட கூப்பன் ஒன்றினை அருகாமையிலுள்ள செலின்கோ லைஃப் கிளையொன்றில் ஒப்படைத்தமையின்மூலம் மேற்படி ரன்தரு கல்விச் சுற்றுலா அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் கலந்துகொள்வதற்கான வாய்ப்பு இவர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம் (பகுதி-I) (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: ..................................................

18)  இவ்வுருவில் வரையக்கூடிய சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை யாது?

1. 2 2. 4 3. 1

19) மாலாவின் நிறை 22kg 700g ஆகும். மாலாவின் தந்தை மாலாவின் நிறையின் 2 மடங்காகும் எனின், தந்தையின் நிறை யாது?

1. 45kg 400g 2. 45kg 3. 47kg

20) குரங்கொன்று ஒரு பாய்ச்சலில் 1.5m தூரம் பாயும். அந்த குரங்கு 5 பாய்ச்சலில் எத்தனை மீற்றர் தூரம் பாய்ந்திருக்கும்?

1. 7.5m 2. 8m 3. 7.5

★ *21ஆம், 22 ஆம் வினாக்களில் பொருத்தமற்ற உருவை தெரிவு செய்க.*

21) 

22) 1. நி 2. தி 3. பி

23) □ + □ + □ x ○ = 24 அருகில் உள்ள கணித செய்கையில் ○ வர வேண்டிய எண் யாது?

1. 4 2. 5 3. 3

★ *அருகில் உள்ள கணித செய்கையை விளங்கி 24 ஆம், 25 ஆம் வினாக்களுக்கு விடை தருக.*

```
  A T A
  A T A
  S T T
  -----
  7 6 8
```

24) A யின் பெறுமானம் யாது?

1. 3 2. 2 3. 4

25) T யின் பெறுமானம் யாது?

1. 2 2. 3 3. 1

26) ஒருவர் கிழக்குத் திசையை நோக்கி 50m நடந்து, பின்னர் இடப்பக்கம் திரும்பி 50m நடந்து, மீண்டும் வலப்பக்கமாக திரும்பி 5m நடந்தார் எனின், தற்போது அவர் ஆரம்பித்த இடத்திற்கு எத்திசையில் இருக்கிறார்?

1. வடக்கு 2. தெற்கு 3. கிழக்கு

27) 1, 2, 3, 4, 5, 6, 7 இந்த எண் வரிசையில் உள்ள ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை யாது?

1. 12 2. 16 3. 15

28) 2, 4, 8, ......., ......., ....... இவ்வெண் கோலத்தில் இடைவெளியில் வர வேண்டிய எண்கள் முறையே;

1. 10, 12, 14 2. 10, 14, 18 3. 16, 32, 64

29) 'இருபதாயிரத்து ஐம்பது' என்பதை இலக்கத்தில் எழுதினால்;

1. 2050 2. 20005 3. 20050

30) 3509 இற்குச் சமமான கோவை எது?

1. (35 x 100) + 10 x 9 2. (35 x 100) + 100 x 9
3. (35 x 100) x (9x1)




## தமிழ் - சுற்றாடல் (பகுதி-I)

31) நன்றி மறக்கவும் மாட்டார்; நட்டாற்றில் விடவும் மாட்டார். 'நட்டாற்றில் விடல்' என்றால்;

1. மனதை வருந்தச் செய்தல் 2. குற்றத்தை மறைக்கப் பார்த்தல்
3. ஆபத்துவேளையில் கைவிடல்

32) மாதவி வீட்டு வேலைகளை ஆறப்போடமாட்டாள். 'ஆறப்போடல்' என்றால்;

1. கவனமாக இருத்தல் 2. இணங்கிப் போதல் 3. பிற்போடல்

33) நீரின் மட்டம் எப்பொழுதும் கிடையாக இருக்கும். இது;

1. உண்மை 2. பொய் 3. கூற முடியாது

34) கமலன் நித்தம் நித்தம் பாடுபட்டான். இங்கு 'நித்தம் நித்தம்' என்பது;

1. தினமும் 2. நாள்தோறும் 3. நித்திரையின்றி

35) 'டங் டங் சத்தம் பார் ஆலையிலே...
இரும்பு உருக்கி அடிக்கிறார் ஆலையிலே...' இப்பாடல்;

1. அருவிவெட்டும் பாடல் 2. தொழிற்பாடல்
3. வண்டிப் பாடல்

36) நடந்து முடிந்ததைக் காட்டும் காலம் எது?

1. நிகழ்காலம் 2. இறந்தகாலம் 3. எதிர்காலம்

37) 'அறம் செய்ய விரும்பு' என்பதில் 'அறம்' என்பதன் பொருள்;

1. தர்மம் 2. புண்ணியம் 3. கொடை

38) தளவாடி என்பது;

1. கார்களிலுள்ள கண்ணாடி 2. முகம் பார்க்கும் கண்ணாடி
3. பூதக்கண்ணாடி

39) பஸ் ஒன்றில் எப்போதும் காணப்படுவது;

1. சில்லுகள், பிச்சைக்காரர், பயணிகள்
2. பொலிஸ், சாரதி, பயணிகள்
3. பயணிகள், சில்லுகள், ஆசனங்கள்

40) பால் காட்டாத சொல்;

1. குமார் 2. வீரன் 3. நோயாளி

## புலமைப்பரிசில் விடைகள்

### கணிதம்/ தமிழ்/ சுற்றாடல் (பகுதி - I)

(ஜூன் 24 மற்றும் ஜூலை 01 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 1 | 09. 3 | 17. 2 | 25. 1 | 33. 1 |
| 02. 1 | 10. 1 | 18. 1 | 26. 3 | 34. 1 |
| 03. 3 | 11. 3 | 19. 1 | 27. 2 | 35. 2 |
| 04. 3 | 12. 1 | 20. 1 | 28. 3 | 36. 2 |
| 05. 3 | 13. 2 | 21. 3 | 29. 3 | 37. 1 |
| 06. 3 | 14. 2 | 22. 3 | 30. 3 | 38. 2 |
| 07. 1 | 15. 3 | 23. 1 | 31. 3 | 39. 3 |
| 08. 1 | 16. சரியான விடை R.BGKD.DC | 24. 1 | 32. 3 | 40. 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கோப்பி பயிர்ச்செய்கைக்காக வந்த ஐரோப்பியர்கள்

மேற்கிந்திய தீவுகளில் ஏற்பட்ட கோப்பியின் வீழ்ச்சியால் அந்நியர்கள் இலங்கை மீது கவனம் செலுத்தினர். இதனால், இலங்கையின் பயிர்ச்செய்கையாளர்களும் கோப்பியை அதிகம் பயிரிட ஆரம்பித்தனர். குறுகிய காலத்தில் முழு மலையகமும் கோப்பித் தோட்டங்களால் நிறைந்ததில் இருந்து அது எந்தளவு வேகமாக நடந்தேறின என்பதை அறியலாம்.

கி.பி. 1834 - 1843 க்கும் இடைப்பட்ட பத்தாண்டுகளில் அரச காணிகளில் 2,47,128 ஏக்கர் விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அன்று தனியொருவர் மாத்திரம் ஒரு ஏக்கர் ஐந்து சிலிங் படி 30,825 ஏக்கரை விலைக்கு வாங்கினர். கண்டியில் ஒரு புசல் கோப்பி ஐந்து சிலிங் ஆக இருந்தது. எனினும், இவ்வாறு விலைக்கு வாங்கிய காணிகள் அனைத்தும் கோப்பிப் பயிர்ச்செய்கைக்காக உடனடியாகப் பயன்படுத்தப்படவில்லை. அதிகமானோர் அந்தக் காணிகளை தமக்கு ஒருதொகை இலாபத்தை வைத்து விற்றனர். அதனால், சிறிது காலத்தில் கண்டியின் இரு புறமும் இருந்த மலைத்தொடர்கள் கோப்பித் தோட்டங்களால் நிறைந்தன.


கி.பி. 1845 இல் கோப்பிப் பயிர்ச்செய்கை மீதான அதீத அக்கறை உச்சக்கட்டத்தை அடைந்தது. கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் அதிகாரிகள் தாம் சேமித்த பணத்தை கோப்பிப் பயிர்ச்செய்கையில் முதலீடு செய்தனர். கொழும்புக்கு வந்த அனைத்துக் கப்பல்களிலும் செல்வந்தர்கள் வந்தனர். பல்வேறு தராதரத்தினரும் பல்வேறு வயதினருமான ஐரோப்பியர் அவர்கள் மத்தியில் காணப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களால் காண்பதெல்லாம் தோற்ற மயக்கங்களா? 19

தொகுப்பாக்கம் தாரிக் அஸீஸ்

கடந்த வாரம் இப்பகுதியில், அம்பிகிராம் (Ambigram) பற்றி அறிமுகம் செய்திருந்தோம். இந்த வாரம் இன்னும் சில Ambigram அமைப்புகள் பற்றி அறிந்து கொள்வோம்.



இந்தப் படத்தின் மத்தியிலுள்ள சாம்பல் நிறத்திலான புள்ளியை ஐந்து செக்கன்களுக்கு தொடர்ச்சியாகப் பாருங்கள். பின்னர், உங்கள் தலையை முன்னும் பின்னுமாக அசைத்துப் பாருங்கள், அந்தப் புள்ளியைச் சூழக் காணப்படுகின்ற அமைப்பு சுழலத் தொடங்குவதை அவதானிக்கலாம். இங்கு புள்ளியைச் சூழக் காணப்படுகின்ற வட்டவடிவிலான முறையில் ஒழுங்கமைப்பட்ட அமைப்பின் காரணமாகவே, இவ்வாறு அசைவில்லாத அமைப்புக்கள் ஒருகட்டத்தில் எமது பார்வைப் புலத்தில் அசைவது போல் தோன்றுகின்றன.






இதைத் தலைகீழாக வாசித்தாலும், Angels & Demons என்றே தோன்றும்.




இந்தப் படத்திலுள்ள எழுத்துக்களை தலைகீழாக வாசித்தாலும், Father என்றே தோன்றும்.

## நீர் வழிந்தோடும் மாயமென்ன?




இங்கே காணப்படுகின்ற நீர்க்குழாய்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந்தோடுவதை உங்களால், கண்டுகொள்ள முடிகிறதா? இங்கு அசைகின்ற நீர்த்தாரைகள் போன்று, அசைவில்லாத நீல நிறக் கோடுகள் தோன்றுவதற்கு, அதன் அருகிலமைந்திருக்கின்ற கறுப்பு நிறத்திலான கட்டங்களே காரணமாகிறது. பொதுவாக, நாம் பொருள்களை அவை அமைந்திருக்கின்ற சூழல் சார்பாகவே காண்கின்றோம். அதுவே பல நேரங்களில் தோற்ற மயக்கங்களாக தோன்றுவதற்கு ஆதாரமாகிவிடுகின்றன.

## காட்சிக்குள் புதைந்துள்ள முகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### இனங்காணப்படாத ஆகாய வஸ்துக்கள்

அமெரிக்க அரசு, அந்நாட்டின் விமானப்படை மூலம் சேகரித்த ரகசிய அறிக்கைகள், புகைப்படங்கள் மற்றும் 12,000 வீடியோக்களை இணையத்தளங்கள் ஊடக அண்மையில் வெளியிட்டிருந்தது. 1947 முதல் 1969 வரையில் பெறப்பட்ட இன்ங்காணப்படாத ஆகாய வஸ்துக்கள் குறித்த தகவல்கள், இந்த ரகசிய அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இனங்காணப்படாத ஆகாய வஸ்துக்கள், பறக்கும் தட்டுகள் மற்றும் வேற்றுக்கிரக உயிரினங்கள் குறித்து அறிவதில் ஆர்வம் கொண்டுள்ள பலரையும் இந்த அறிக்கைகள் ஆச்சரியத்திற்கு உள்ளாகியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இணையத்தளங்களூடாக அம்பலப்படுத்தப்பட்ட இந்த விபரங்கள் மற்றும் புகைப்படங்களில் பெரும்பாலானவை, அமெரிக்க அரசினதும் விமானப் படையினதும் ரகசியங்கள் உள்ளடக்கிய (BLUE BOOK) 'ப்ளூ புக்' இல் பதிவாகியிருப்பவை ஆகும்.

# அடிக்கடி வெளியாகும் வேற்றுக்கிரக ரகசியங்கள்

1947 ஆம் ஆண்டு, ஐக்கிய அமெரிக்காவின் நியூ மெக்ஸிகோ மாநிலத்தின் ரொஸ்வெல் பிராந்தியத்தில் பறக்கும் தட்டொன்று உடைந்து விழுந்ததாகவும், அந்த பறக்கும் தட்டில் இருந்த வேற்றுக்கிரக வாசிகளின் உடல்கள் உட்பட, பறக்கும் தட்டின் சிதறிய பாகங்களும்கூட அமெரிக்க அரசினதும் அமெரிக்க விமானப் படையினதும் உடமைகளாக்கப்பட்டதாகவும், பின்னர், அவை ஏரியா-51 எனும் ரகசிய இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இன்று நாம் தொழில்நுட்பத்துறையில் பெரும் முன்னேற்றம் கண்டிருப்பது, அந்த வேற்றுக்கிரக தொழில்நுட்பத்தின் மீள் நிர்மாணமே என சிலர் கருதுகின்றனர். ஆனால், அமெரிக்க அரசோ அல்லது அமெரிக்க விமானப் படையினரோ இதனை முற்றாக மறுத்துள்ளதோடு, உடைந்து விழுந்தது இனந்தெரியாத விமானமோ, விண்கலமோ அல்லது பறக்கும் தட்டோ அல்ல என்றும், காலநிலைத் தகவல்களை அறிய விண்ணில் ஏவப்பட்ட ஒரு பலூனே அது என்றும் உறுதியாக அறிவித்திருந்தது.



வேற்றுக்கிரக வாசிகளின் உடல்கள்

### ரொஸ்வெல் நிகழ்வு

ரொஸ்வெல் சம்பவம் சூழ்ச்சிகரமான ஒரு நிகழ்வு என்றும், ரொஸ்வெல் பிராந்தியத்தில் வேற்றுக்கிரக விண்கலமொன்று உடைந்து விழுந்ததாகவும், வேற்றுக்கிரக வாசிகளின் இறந்த உடல்கள் அமெரிக்க விமானப்படைக்கு கிடைத்ததாகவும் புதிய தகவல்கள் பல தற்போதளவிலும் வெளியாகிய வண்ணமே உள்ளன. அது மாத்திரமல்ல, இந்த விபத்தில் காயமடைந்து, பின்னர் அமெரிக்க அரசின் ஆய்வுகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட வேற்றுக்கிரக வாசிகளின் சில உடல்களின் புகைப்படங்களும் தற்போது வெளியாகியுள்ளன. பேர்னாட் ரே என்பவரே இந்தப் புகைப்படங்களை எடுத்துள்ளார். 1947 ஆம் ஆண்டிற்கும் 1949 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்திலேயே இவை எடுக்கப்பட்டன. இவை, ஏரியா 51 என்ற பெயரில் அழைக்கப்படுகின்ற அமெரிக்காவின் ரகசிய வலயத்திலுள்ள களஞ்சியமொன்றில் வைக்கப்பட்டிருந்ததாகவும், பின்னர் இவை குறித்து ஊடகங்களுக்கு அறியக்கிடைத்ததாகவும் கூறப்படுகின்றது. இதன் உண்மைத் தன்மையை அறிந்து கொள்வதற்காக இப்பொழுது பல ஊடக நிறுவனங்கள் முயற்சிப்பதாகவும் கூறப்படுகின்றது.

### சைன் மற்றும் க்ரஜ்

1945 ஆம் ஆண்டிலேயே இனங்காணப்படாத ஆகாய வஸ்துக்கள் குறித்து அமெரிக்க அரசும் அமெரிக்க விமானப்படையும் அக்கறை செலுத்த ஆரம்பித்தன. 1947 மற்றும் 1949 ஆம் ஆண்டுகளில் இவை குறித்து ஆய்வுசெய்வதற்காக இரு திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. அதில் ஒன்று- 'சைன்'. மற்றையது - 'க்ரஜ்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹோகின்ஸ்ஸின் கூற்று

"வேற்றுக்கிரகங்களில் உயிரினங்கள் இருக்கலாம். எனினும், அவற்றுடன் நல்லுறவை பேணுவதை னித சமுதாயம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், விளைவுகள் பாரதூரமாக இருக்கலாம்.

" இது புகழ்பெற்ற விஞ்ஞானியாகிய ஸ்டீவன் ஹோகின்ஸ் அவர்களின் கருத்தாகும். ஹோகின்ஸ், பிரித்தானிய நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற வானியல் மற்றும் பௌதிக விஞ்ஞானியாவார்.

வேற்றுக்கிரக உயிரினங்கள் புவிக்கு வருகை தந்தால், அது கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்ததற்கு சமனானதாக இருக்கும். ஏனெனில், ஐரோப்பியர்கள் அமெரிக்காவைக் கண்டுபிடித்த பின், அங்கு வாழ்ந்த சுதேசிகளான செவ்விந்தியர்களுக்கு ஏற்பட்ட பேரழிவுகள் என்ன என்பதை நாம் அனைவரும் அறிவோம்" என்று ஸ்டீவன் ஹோகின்ஸ் மேலும் தெளிவுபடுத்துகின்றார்.


ரகசிய புகைப்படங்கள்





ன்பதாகும். இந்த திட்டங்கள் டிவுற்றதும், 1952 இல் 'ப்ளு க்' எனும் திட்டம் ஆரம்பிக்கப் ட்டது.

### ப்ளு புக்

1969 இல் ப்ளு புக் திட்டத்தை டிவுக்குக் கொண்டுவரக் ட்டளையிடப்பட்டது. 1970 இல் ன் அது முழுமையாக முடிவுக்கு ந்தது. இந்த 'ப்ளு புக்' ட்டத்தின் நோக்கங்கள் ரண்டாக அமைந்திருந்தன.

1. இனங்காணப்படாத ஆகாய ஸ்துக்கள், தேசிய பாதுகாப் ...ச்சுறுத்தலானவையா? ல...யா? என்பதைக் கண்ட தல்.

2. இனங்காணப்படாத ஆகாய ஸ்துக்கள் குறித்த தரவுகளை ஞ்ஞான ரீதியாக பகுப்பாய்வு சய்தல்.

இதன்படி, அமெரிக்காவில் பயரளவில் இனங்காணப்படாத காய வஸ்துக்கள் குறித்த பரங்கள், புகைப்படங்கள் ற்றும் வீடியோக்கள் பல்லாயிரக் னக்கில் சேகரிக்கப்பட்டன. வற்றில் அதிகமானவை சாதா ன பொதுமக்களால் எடுக்கப் ட்ட புகைப்படங்களாகும். மெரிக்க விமானப்படையின் மானிகள் சிலரும் பல சந்தர்ப் ங்களில் இத்தகைய ஆகாய ஸ்துக்களைக் கண்டதாக வல்கள் வழங்கியிருந்தனர்.

### கொன்டோன்

1968 இல் ப்ளு புக் திட்டம் பித்து ரகசிய ஊடகங்கள் வழியாக வளிப்படுத்தப்பட்டது. அன்றைய லப்பகுதியில், அதாவது 1960 ம் ஆண்டளவில் மிகவும் புகழ் பற்ற தொடர்பாடல் சாதனங் ாக தொலைக்காட்சி, செய்திப் பத்திரிகை, வானொலி என்பனவே திகழ்ந்தன. இன்றுபோல் முழு உலகையும் இணைக்கும் இணையத்தளங்கள் அன்றைய காலத்தில் இருக்கவில்லை. எனவே, 'ப்ளு புக்' திட்டத்தின் ரகசியம் 'கொன்டோன்' எனும் அறிக்கையினூடாகவே, வெளி உலகிற்கு தெரியப்படுத் தப்பட்டது. 1969 இல் ப்ளு புக் தடைசெய்யப்பட்டதற்கு அந்த வெளியீடே காரணமாக அமைந்தது.

-(ஜெ)

### ஏரியா -51

'ஏரியா-51' என்ற பெயரில் அழைக்கப்படும் வலயத்தில், அமெரிக்க விமானப்படையின் முகாம் ஒன்று அமைந்துள்ளது. இந்த வலயம் அமைந்துள்ள பிரதேசம் சந்திரனின் மேற்பரப்பு போல் இருக்கலாம் என கூறப்படுகின்றது. பறக்கும் தட்டுகளும் வேற்றுக்கிரக உயிரினங்களும் அங்கு இருப்பதாக வதந்திகள் அவ்வப்போது வெளியாகி வருகின்றபோதும், அவை தொடர்பில் வெளியாகும் புதிய புகைப்படங்களின் அடிப்படையில், சந்தேகங்களும் வலுப்பெற்றுள்ளன.

அமெரிக்க விமானப்படையினர் தமது அதிநவீன விமானங்களை இங்குதான் பரீட்சித்துப் பார்க்கின்றனர். அந்த நடவடிக்கைகள் அனைத்தும் மிக ரகசியமாகவே நடைபெறுகின்றன. அமெரிக்க அரசுக்கு சொந்தமான இந்த பிரதேசம், இரண்டாம் உலக யுத்தத்தின்போது குண்டுகளைப் பரீட்சித்துப் பார்க்கும் இடமாக இருந்தது. அவ்வாறு பரீட்சித்துப் பார்க்கும் நடவடிக்கைகள் அணுசக்தி ஆணைக்குழுவின் கீழேயே நடைபெற்றன.



**கேள்வி:** வெப்பமேற்றப்பட்ட காற்றினை நிரப்பியவாறு பயணிகளை ஏற்றிச் செல்லும் வாயு பலூன், எப்படி மேலெழுந்து பறக்கின்றது? அதனை மீண்டும் கீழே இறக்குவது எவ்வாறு?

**பதில்:** வாயு பலூனில் நிரப்பப்பட்டுள்ள வளியானது, பொதுவாக சுற்றுப்புறத்தில் உள்ள வளியைவிட அடர்த்தி குறைவானதாகும். (உதாரணமாக: ஹீலியம் வாயுவினைக் குறிப்பிட முடியும்) வளியை வெப்பமேற்றும் அளவின் அடிப்படையில், பலூனை மேல்நோக்கிச் செலுத்தவும், கீழ்நோக்கி இறக்கவும் முடியும். (காரணம், வெப்பமேற்றப்பட்ட வளி அடர்த்தி குறைவு என்பதனால், வெப்பமேற்றப்பட்ட வளியைக் கொண்ட பலூன் மேல்நோக்கிச் செல்கின்றது) வெப்ப அனலைக் குறைக்கும்போது, பலூனில் உள்ள வளியின் வெப்பநிலை குறைவதனால், அந்த வளியின் அடர்த்தி அதிகரிக்கின்றது. இதன்போது பலூனை கீழ்நோக்கி இறக்க முடியும்.




**கேள்வி:** வீட்டுத் தேவைக்கு கொள்வனவு செய்யப்பட்ட வெங்காய பொதியினை சில நாட்களுக்குப் பின்னர் எடுத்துப் பார்க்கும்போது,அப்பொதி சூடாக இருந்ததுடன், சில வெங்காயங்கள் முளை விட்டு இருந்தன.எனினும், வெங்காயங்களுடன் கொள்வனவு செய்யப்பட்ட பச்சைப் பயறானது, பொதியில் பல நாட்கள் இருந்தபோதும், அதில் எந்தவொரு மாற்றமும் தென்படவில்லை. அது ஏன்?

**பதில்:** வெங்காயத்திலுள்ள நார்கள் சுவாசிப்பதன்மூலம் உருவாக்கும் சக்தியின் ஒரு பகுதி வெப்பமாக வெளியேறுகின்றது. இந்த வெப்பம் தான் வெங்காயம் முளைவிடுவதற்கான காரணமாக அமைகின்றது. பயறில் அடங்கியுள்ள நீர்ச்சத்து மிகவும் குறைவு என்பதனால், அதனுள் இடம்பெறும் சுவாச செயற்பாட்டு மட்டமும் குறைவாகும். அதில் ஈரலிப்புத் தன்மை இல்லாததனால் பயறு முளைவிடுவதில்லை.



**கேள்வி:** தயிர் மற்றும் யோகட் தயாரிப்பின்போது, ஏற்கனவே தயாரிக்கப்பட்ட தயிர் அல்லது யோகட் சிறிதளவு அதில் சேர்க்கப்படுவது ஏன்?

**பதில்:** ஒருவகை பெக்டீரியாவின் தொழிற்பாட்டினால் உருவாக்கப்படும் பொருட்களாக யோகட் மற்றும் தயிர் போன்றவை உள்ளன. இந்த பெக்டீரியாக்கள் லெக்டோபெசிலஸ் பல்கரியஸ் மற்றும் ஸ்ட்ரெப்டொகொகஸ் தர்மோஃபிலஸ் ஆகிய பெயர்களால் அறியப்படுகின்றன. பாதகம் விளைவிக்காத இந்த நுண்ணங்கிகள், யோகட் மற்றும் தயிரில் பெருமளவில் உள்ளன. யோகட் மற்றும் தயிர் தயாரிப்பிற்காக புதிதாக காய்ச்சி ஆறவிடும் பாலில், முன்பு தயாரிக்கப்பட்ட யோகட் அல்லது தயிரை சிறிதளவு சேர்ப்பதன்மூலம் குறிப்பிட்ட அந்த நுண்ணங்கிகள் பாலில் கலந்துவிடுகின்றன. இந்த நுண்ணங்கிகள் வெளியேற்றும் வெப்பம் காரணமாக, தயிர் மற்றும் யோகட் தயாரிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடையும் பனித்தட்டுகளால் கடல் மட்டம் அதிகரிக்கும் அபாயம்



**"அண்டார்க்டிக்காவில் உள்ள மாபெரும் பனித்தட்டுகள் திடீரென உடைந்து செல்லக்கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இதனால், கரையோரப் பிரதேசங்கள் பாரிய சேதங்களை எதிர்நோக்கலாம். நூறு வருடங்களிலோ அல்லது அதை அண்டிய ஒரு காலகட்டத்திலோ 'லார்சென் C' பனித்தட்டுகள் இல்லாதொழிந்து போகலாம். இதனால், உலகின் பொதுவான கடல்நீர் மட்டம் 82 சென்ரிமீற்றரால் அதிகரிக்கலாம்" என அண்டார்க்டிக்கா பனித்தட்டுகள் குறித்து ஆய்வுகளை நடாத்தும் விஞ்ஞானிகள் குழுவொன்று அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தது.**


## விஞ்ஞானிகள் எச்சரிக்கை


உலக வெப்பமடைதல் காரணமாக, அண்டார்க்டிக்காவில் இருக்கும் மிகப்பெரிய பனித்தட்டுகள், ஆபத்துக்களை விளைவிக்கும் வகையில் உடைந்து சென்றுகொண்டிருப்பதாக கடந்த மே மாதம் 13 ஆம் திகதி விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். 'லார்சென் C' எனப்படும் இந்த பனித்தட்டுகள், நூறு வருட கால எல்லைக்குள் உடைந்து, காணாமல் போகக்கூடிய வாய்ப்புகள் உள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த பாரிய பனித்தட்டுகள் உடைந்தால், அதற்குக் கீழாக அமைந்துள்ள பனி ஆறு பெருக்கெடுத்து கடலை நோக்கி வேகமாக ஓடும். இதன் காரணமாக, கடல்நீர் மட்டம் உயரும். கடலின் வெப்பநிலை அதிகரித்து, பனிக்கட்டிகள் உருகிச் செல்லும் நிலை ஏற்படும். இதனால், 2100 ஆம் ஆண்டளவில் உலகின் பொதுவான கடல் மட்டம் 40 செ.மீற்றர் முதல் 63 செ.மீற்றர் வரை உயர்வடையக்கூடும் என விஞ்ஞானிகள் அனுமானிக்கின்றனர்.

## நாம் எதிர்கொள்ளும் ஆபத்துக்கள்

உலக வெப்பம் அதிகரிக்கும்பொழுது, கடல்நீரும் வெப்பமடையும். இதனால், கடல்நீரின் கொள்ளளவு அதிகரித்து, கடல் மட்டம் உயர்வடையும். இதன் காரணமாக, நாம் பல்வேறு சூழலியல் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். கடல் மட்டம் உயர்வடைவதால் கடலோர நகரங்கள் நீரில் மூழ்கும் வாய்ப்பு ஏற்படும். இதனால், அந்நகரங்களில் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் மக்களின் வாழ்க்கைக்கும் அவர்களின் இருப்பிற்கும் பாரிய சேதங்கள் ஏற்படும். ஆறுகள் வழியாக உள்நுழையும் கடல்நீர், நீர்நிலைகளுடன் கலக்கும்போது, அந்த நீர்நிலைகள் உப்புநீராக மாறும். இதனால், விவசாயம் உட்பட, மக்களின் அன்றாட நடவடிக்கைகளும் பாதிப்படையும்.




## 'லார்சென் C'

'லார்சென் C' எனப்படுவது உலகின் நான்காவது பெரிய பனித்தட்டாகும். 55,000 சதுர கிலோமீற்றர் அளவிற்கு பரந்துள்ள இந்த பனித்தட்டானது, பெல்ஜியம் நாட்டைப் போல் இரு மடங்கு பெரியது.

'லார்சென் A' எனும் முதலாவது பனித்தட்டு, 1995 இல் உடைந்தது. அதனைத் தொடர்ந்து 2002 இல் 'லார்சென் B' பனித்தட்டும் உடைந்து சென்றது. கடல் வெப்பத்தின் காரணமாகவே, இந்த பனித்தட்டுகள் அடிப்பகுதியில் உருகத் தொடங்கி, பின்னர் மேற்பகுதியிலும் உருகுகின்றன.

இவ்வாறு கடலில் உள்ள பனித்தட்டுகள் உருகி, உடைந்து செல்லும்பொழுது, அதனுடன் தொடர்புடைய நிலப்பகுதியில் உள்ள பனித்தட்டுகளும் உடைந்து செல்ல ஆரம்பிக்கின்றன. அவையும் கடலை நோக்கிப் பெருக்கெடுத்து ஓடும்போது, கடலில் நீர்மட்டம் மென்மேலும் அதிகரிக்கும். பொதுவாக, அனைத்து குளிர்வலயத்திலும் உள்ள பனித்தட்டுகள் உருகி, உடைந்தோடும் தன்மையுடையவை. இது இயற்கையாகும். எனினும், இயற்கையாக நிகழும் அந்த வேகத்தைவிட, அசாதாரணமான முறையில் இந்த பனித்தட்டுகள் உடைந்து ஓடுவதற்குக் காரணம், இயற்கைச் சூழலை மாசுபடுத்தும் வகையில் மனிதனால் மேற்கொள்ளப்படும் முறைகேடான நடவடிக்கைகளாகும்.

-(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AH1N1 காய்ச்சல் பற்றி அறிந்துகொள்வோம்!



**பாடசாலை மாணவ, மாணவியர் மத்தியிலும் முன்பள்ளி செல்லும் சிறார்கள் மத்தியிலும் இந்த காய்ச்சல் தீவிரமாகப் பரவுகின்றது.**

## AH1N1 காய்ச்சல் என்றால் என்ன?

காலத்திற்குக் காலம் சிலவகை நோய்கள் பரவுவது வழமையான நிகழ்வாகும். பலதரப்பட்ட வைரஸ் கிருமிகளினால் ஏற்படும் காய்ச்சல்களும் இதில் அடங்கும். தற்போதும் இவ்வாறான காய்ச்சலே பரவி வருகின்றது. இதனால், இந்த AH1N1 காய்ச்சல் பற்றிய விபரங்களைப் பார்ப்போம்.

## விரைவாகப் பரவும் காய்ச்சல்

AH1N1 என்பது மனிதருக்கு மனிதர் வேகமாகத் தொற்றும் ஒருவகை வைரஸ் காய்ச்சலாகும். குறிப்பாக, பாடசாலை மாணவ, மாணவியர் மத்தியிலும் முன்பள்ளி செல்லும் சிறார்கள் மத்தியிலும் இந்த காய்ச்சல் தீவிரமாகப் பரவுகின்றது. வீடுகளில் உள்ளவர்களுக்கும் இந்த நோய் பரவுகின்றது.

## பறவைக் காய்ச்சலுக்கும் இதற்கும் தொடர்பு உண்டா?

எமது நாட்டில் தற்போது பரவி வரும் இருமல் மற்றும் சளி உள்ள நோயாளிகள் மத்தியில் சிலர் இன்புளுவென்ஸா AH1N1 வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் என்று தொற்றுநோய்கள் பற்றிய மருத்துவப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

AH1N1 வைரஸ் Orthomyxo வைரசாகும். இந்த வைரசின் சில பகுதிகள் மனிதர்களில் இன்புளுவென்ஸா நோய் நிலைமையை



ஏற்படுத்துகின்றது. சில பன்றிக் காய்ச்சலை ஏற்படுத்தக் காரணமாகின்றது. தற்போது எமது நாட்டில் பரவி வரும் இன்புளுவென்ஸா AH1N1 நோய் பன்றிக் காய்ச்சல் அல்லது பறவைக் காய்ச்சலுடன் தொடர்புபட்ட காய்ச்சல் அல்ல.



## நோய் அறிகுறிகள்

இந்த காய்ச்சல் சுவாசப்பாதை சம்பந்தப்பட்ட நோயாளிகளில் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியது. தொண்டை நோ, உள்நாக்கு அழற்சியுடன் நிணநீர்க்கட்டிகள் வீக்கம், இருமல், சளி,உடல் நடுக்கத்துடன் காய்ச்சல், சுவாசிப்பதில் சிரமம், நித்திரை உணர்வு, களைப்பு,தலைவலி, வயிற்று நோ, வயிற்றோட்டம், தும்மல், மூக்கடைப்பு, உடல் நோ என்பன நோய் அறிகுறிகளாகும். இந்த நோய் அறிகுறிகள் அனைத்தும் ஒருவருக்கு ஏற்படுவதில்லை.நோய் அறிகுறிகள் ஒவ்வொருவர் மத்தியிலும் வேறுபடுகின்றது. பொதுவாக காய்ச்சல், தடிமல் ஒரு வாரத்தில் குணமாகிவிடும். ஆனால், இந்த நோய் இரண்டு வாரங்கள் வரை நீடிக்கக்கூடும்.

## தொற்றும் விதம்

எச்சில் (உமிழ்நீர்) காரணமாகவே, இந்த நோய் தொற்றுகின்றது. நோயாளி தும்மும்போதும் இருமும்போதும் வெளியேறும் சளியிலிருக்கும் கிருமிகள் மற்றவர்களின் சுவாசப்பாதைக்கு சென்று நோயை ஏற்படுத்துகின்றது. தொடுகையின் மூலமும் நோய் தொற்றலாம். இதனால், இந்த நோயின் பாதிப்புக்குள்ளானவர்கள் பாடசாலை செல்வதனைத் தவிர்க்கலாம். தும்மும்போது வாயை மூடிக்கொள்ள வேண்டும். கைகளை சவர்க்காரம் இட்டு அடிக்கடி கழுவிக்கொள்ளுதல் வேண்டும்.

## பின்வரும் விடயங்களை கவனிக்கவும்

சுவாசப்பாதை சம்பந்தப்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பாதிப்புள்ளவர்கள், நீரிழிவு மற்றும் அதிக உடற்பருமன், உயர் இரத்த அழுத்தம், இதய நோய், மூட்டுவலி கொண்டவர்களுக்கு இந்த நோயின் பாதிப்பு ஏற்பட்டால் விரைந்து மருத்துவ சிகிச்சைகளைப் பெற வேண்டும்.



## நோயாளிகள் இறப்பது ஏன்?

இந்த நோயின் பாதிப்புக்குட்பட்டவர்கள் அனைவரும் இறப்பதில்லை. சிகிச்சை பெறாமல் அசிரத்தையாக இருப்பவர்களுக்கு நியூமோனியா நிலைமை ஏற்படுவதனால், சிலர் இறக்கின்றனர். இதனால், நோய் அறிகுறிகள் ஏற்பட்டவுடன், மருத்துவ சிகிச்சைகளைப் பெறுவது அவசியமாகும்.

## உணவு முறைகள்

உடலின் போஷாக்கு மட்டத்தினை பேணுவது அவசியமாகும். இதனால், நன்கு உணவு உட்கொள்ள வேண்டும். நன்கு நீர் அருந்துவது அவசியம். ஓய்வும் அவசியம். தேவையின்றி உடற்பயிற்சிகள் செய்வதும், குளிர்மையான நீரில் குளிப்பதும் தவிர்த்துக்கொள்ளப்படல் வேண்டும். தேவையெனில், இளம் சூடான நீரில் உடம்பினைக் கழுவலாம்.

## ஓய்வு ஏன் அவசியம்?

ஓய்வாக இருப்பதனால் வைரஸ் நீங்கி விடுகின்றது. சிலர் காய்ச்சல் வந்தவுடன் மருந்துகளை உட்கொண்டுவிட்டு பாடசாலை செல்கின்றனர். அது தவறான செயலாகும். இதனால், காய்ச்சல் குறைய நீண்டநாள் எடுக்கும். அத்துடன், நோய் தீவிரமடையவும் கூடும். அதனால், முடியுமானவரை ஓய்வாக இருப்பது அவசியம். முழுமையாகக் காய்ச்சல் குணமடைந்தவுடன், பாடசாலை செல்வதே சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் மாலாவுக்கும் ராணிக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**රාණි: මාලා, එන්න.. මොකද මේ පැත්තේ?**
மாலா, என்ன... மொகத மே பெத்தே?
ராணி: **மாலா, வாங்க... என்ன இந்தப் பக்கம்?**

**මාලා: මම ඔයාගේ සිංහල පොත ගෙනියන්න ආවේ.**
மம ஒயாகே சிங்ஹல பொத கெனியன்ன ஆவே.
மாலா: **நான் உங்களுடைய சிங்களப் புத்தகத்தைக் கொண்டுபோக வந்தேன்.**

**රාණි: ඔයා ඊයේ පාසල් ආවේ නැනේ.**
ஒயா ஈயே பாசல் ஆவே நேனே.
ராணி: **நீங்கள் நேற்று பாடசாலை வரவில்லைத்தானே.**

**මාලා: ඔව් රාණි. ඔයා මේ මොනවද කරන්නේ?**
ஒவ் ராணி. ஒயா மே மொனவத கறன்னே?
மாலா: **ஆம் ராணி. நீங்கள் இங்கு என்ன செய்கிறீர்கள்?**

**රාණි: මම මල් වගයක් හදනවා මාලා.**
மம மல் வகயக் ஹதனவா மாலா.
ராணி: **நான் பூக்கள் கொஞ்சம் செய்கிறேன் மாலா.**

**මාලා: ඒ මොකට ද රාණි?**
ஏ மொகட்ட த ராணி?
மாலா: **அது எதற்காக ராணி?**

**රාණි: මේ මගේ විනෝදාංශය. ඔයාගේ විනෝදාංශය මොනවද?**
மே மகே வினோதாங்ஷய. ஒயாகே வினோதாங்ஷய மொனவத?
ராணி: **இது என்னுடைய பொழுதுபோக்கு. உங்களது பொழுதுபோக்கு என்ன?**

**මාලා: මම පොත් කියවන්න හරි ආසයි.**
மம பொத் கியவன்ன ஹரி ஆசய்.
மாலா: **எனக்கு புத்தகம் வாசிக்க மிகவும் விருப்பம்.**

**රාණි: ඇත්තද? මම නම් පොත් කියවන්න ඒ තරම් ආස නැහැ.**
எத்தத? மம நம் பொத் கியவன்ன ஏ தரம் ஆச நெஹெ.
ராணி: **உண்மையா? எனக்கென்றால், புத்தகம் வாசிக்க அவ்வளவு விருப்பம் இல்லை.**

**එන්නකෝ, මම හදපු මල් පෙන්වන්න.**
என்னகோ, மம ஹதபு மல் பென்வன்ன.
**வாருங்கள், நான் செய்த பூக்களைக் காட்டுகிறேன்.**

**මාලා: ෂා.. හරිම ලස්සණ මල්.**
ஷா...! ஹரிம லஸ்ஸண மல்.
மாலா: **ஷா...! நல்ல அழகான பூக்கள்.**

**රාණි: මේ මල් ටික ඔයා අරගෙන යන්න.**
மே மல் டிக்க ஒயா அறகென யன்ன.
ராணி: **இந்தப் பூக்களை நீங்கள் கொண்டு போங்கள்.**

**මාලා: බොහෝම ස්තූතියි රාණි.**
பொஹோம ஸ்தூதிய் ராணி.
மாலா: **மிக்க நன்றி ராணி.**



### பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புக.**

1. ........... ගෙනියන්න ආවේ.
2. ................. මොනවද?
3. හරිම ................. මල්.




## எதிர்கால தனி வாக்கியம்
## Future Simple Tense

எதிர்கால தனி வாக்கியங்களில் காணப்படுகின்ற வினா வாக்கியங்கள், உடன்பாடு வாக்கியங்கள் மற்றும் எதிர்மறை வாக்கியங்கள் ஆகியவற்றை மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

அ) Will Kumar meet the manager tomorrow?
குமார் நாளை முகாமையாளரை சந்திப்பானா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

ஆ) Yes, he will meet the manager tomorrow.
ஆம், அவன் நாளை முகாமையாளரைச் சந்திப்பான்.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

இ) No, he won't meet the manager tomorrow.
இல்லை, அவன் நாளை முகாமையாளரை சந்திக்கமாட்டான்.
(எதிர்மறை வாக்கியம்-Negative Sentence)

* Will he meet?
அவன் சந்திப்பானா?
* Yes, he will meet.
ஆம், அவன் சந்திப்பான்.
* No, he won't meet. (Negative)
இல்லை, அவன் சந்திக்கமாட்டான். (எதிர்மறை)

ஈ) Will Lalitha write the letter tomorrow?
லலிதா அந்தக் கடிதத்தை நாளை எழுதுவாளா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

உ) Yes, she will write the letter tomorrow.
ஆம், அவள் அந்தக் கடிதத்தை நாளை எழுதுவாள்.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

ஊ) No, she won't write the letter tomorrow.
இல்லை, அவள் அந்தக் கடிதத்தை நாளை எழுதமாட்டாள்.
(எதிர்மறை வாக்கியம்-Negative Sentence)

* Will Lalitha write?
லலிதா எழுதுவாளா?
* Yes, she will write.
ஆம், அவள் எழுதுவாள்.
* No, she won't write. (Negative)
இல்லை, அவள் எழுதமாட்டாள். (எதிர்மறை)

எ) Will the cat jump over the fence?
அந்தப் பூனை வேலியின் மேலாகப் பாயுமா?
(வினா வாக்கியம்-Interrogative Sentence)

ஏ) Yes, it will jump over the fence.
ஆம், அது வேலியின் மேலாகப் பாயும்.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











# பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி பிரதி அதிபர் சேய்ந்தனின் ஓய்வு...

கொழும்பு, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராக கடமையாற்றிய கனகசபாபதி சேய்ந்தன் அண்மையில் தனது கடமையிலிருந்து ஓய்வுபெற்றதையொட்டி அவருக்கான பிரியாவிடை வைபவம் நடைபெற்றது. கல்லூரியின் அதிபர் ஐயம்பிள்ளை ராஜரட்ணத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்லூரியின் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

விஞ்ஞானமாணி பட்டதாரியான சேய்ந்தன் அவர்கள் 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக இணைந்துகொண்டார். அன்று தொடக்கம் கடந்த 31 வருடங்களாக பாடசாலையின் வளர்ச்சியில் அயராது பங்களிப்பைச் செலுத்தினார். இவரிடம் பௌதிகவியல் பாடத்தைக் கற்ற உயர்தர மாணவர்கள் பலர் இன்று வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும், விஞ்ஞானப் பட்டதாரிகளாகவும் மிளிர்ந்து கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறந்த ஆளுமைத் திறனும், மாணவர்களிடம் சிறந்த புரிந்துணர்வையும் கொண்டிருந்த சேய்ந்தன் அவர்கள் 1996 ஆம் ஆண்டில் கல்லூரியின் கணித, விஞ்ஞானத்துறை தலைவராகவும் நியமிக்கப்பட்டார். இதன் காரணமாக, பாடத்திட்டக் கல்வியில் மட்டுமன்றி, இணை பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்கள் சிறந்து மிளிர்ந்ததுடன், பலரும் பல்கலைக்கழக அனுமதியையும் பெற்றனர்.

பாடசாலையின் முகாமைத்துவ கட்டமைப்பு, பரிசளிப்பு விழாக்கள், முத்தமிழ் விழாக்கள், சமய விழாக்கள் உட்பட கல்லூரியில் நடைபெறும் அனைத்து விசேட நிகழ்வுகளையும் முன்னின்று திறம்பட நடத்தியமை குறித்து பெற்றோர் மத்தியிலும் இவர் பெரும் அபிமானத்தைப் பெற்றிருந்தார். மேலும், இந்து மாமன்றப் பொறுப்பாசிரியராக இருந்து சமய விழாக்களையும் நடத்தி சமயப் பற்றை ஊட்டியதுடன், கல்லூரிக்கு புகழையும் ஈட்டிக் கொடுத்தார். கல்லூரிக்காகவும், மாணவர்களுக்காகவும் இவர் ஆற்றிய இந்த அளப்பரிய சேவை கல்லூரி வரலாற்றில் அழியாத சுவடாக அமைந்திருக்கும் என்பது திண்ணம்.

## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



பள்ளிப்போருவ-ஹெம்மாதகமையைச் சேர்ந்த மொஹமட் ஃபாஹிம் - ஃபாத்திமா சிஹாரா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் ஷனாப், தனது இரண்டாவது பிறந்தநாளை 21.06.2015 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.


## கைவண்ணங்கள்




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.கஸ்தூரி,
பொ/தி/மன்னம்பிட்டி த.ம.வித்.,
பொலன்னறுவை.



பு.தனுஷ்.
கொ/விக்னேஸ்வரா கல்லூரி.




ரெ.தர்ஷணன்,
நோர்வூட் தமிழ் ம.வித்., நோர்வூட்.



சு.அகீசன்,
யாழ்ப்பாணக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



ஐ.அட்ஷயன்,
ரிப்பப்ளிக்கன் சர்வதேச பாட.,
நுவரெலியா.



எஃப்.சஹ்லா,
ப/அல்-முர்சித் ம.வித்., சில்மியாபுர.



எம்.திஸ்னி,
பறகஹதெனிய தேசிய பாடசாலை,
பறகஹதெனிய.



ஆகாஷ் கிருஷாந்தன் எந்தனி,
புனித அந்தோனியார் கல்லூரி,
கண்டி.



எ.பாத்திமா மதீஹா,
முஸ்லிம் ம.வித்., கஹடோவிட்ட.



எம்.சஹ்ராமா,
நதா பாலர் பாட.,மீயல்லை.



நா.பிரவிந்தன்,
சென். ஜோசப் த.ம.வித்தியாலயம்,
மஸ்கெலியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவை இப்படி

★ மலைப்பாம்பு இனமே உலகின் மிகப் பெரிய பாம்பு இனமாகும். இவை சுமார் 30 அடி வரை வளரக்கூடியவை.





★ பார் ஹெடட் கூஸ் எனப்படும் வாத்து இனமே உலகில் மிகவும் உயரத்தில் பறக்கக்கூடிய பறவையாகும்.

★ வால்வெள்ளி பனியினாலும், தூசுகளினாலும் உருவாகிய வால் கொண்ட வான்பொருளாகும்.



★ மண்டரின் மொழியே உலகில் அதிகம் பேசப்படும் மொழியாகும்.

எம்.சதீக், க/ஜப்பார் மத்திய கல்., கலகெதர.

# உலகின் மிகக் கொடிய விஷமுள்ள பூச்சி...





உலகின் மிகக் கொடிய விஷமுள்ள பூச்சி இனம் எறும்பு என்று ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 6 கால்களும் 3 உடல் பாகங்களும் உடையதுதான் இந்த எறும்பு. ஆனால், இது நாம் சாதாரணமாகப் பார்க்கும் எறும்பு இனம் அல்ல. 'ஹார்வஸ்ட் ஆண்ட்' என்றழைக்கப்படும் அறுவடை எறும்பு இனம் ஆகும். அதன் உருவத்தோடு சதவீத அடிப்படையில் ஒப்பிடுகையில், ஒரு தேனீக்கு இருக்கும் விஷத்தைவிட, இவ்வகை எறும்புகளுக்கு விஷம் அதிகமாக இருப்பதாக விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர்.

எறும்புகள் கடிப்பதும், கொட்டுவதும் இரு வெவ்வேறு நடவடிக்கைகளாக இருப்பது கவனிக்கத் தக்கது. சில எறும்புகள் கடிக்கும் ஆனால் கொட்டுவதில்லை; சில எறும்புகள் கடித்துவிட்டு கடித்த இடத்தில் விஷத்தை பீய்ச்சியடித்துவிடும். இவ்வாறே, சில எறும்பு வகைகள் கொடுக்குகளால் கவ்விப்பிடித்துக்கொண்டு கடித்த பாகத்தில் தொடர்ச்சியாக விஷத்தைச் செலுத்தும் இயல்பைக் கொண்டவையாக காணப்படும். சுமார் இரண்டு கிலோ எடையுள்ள ஒரு எலியை இவ்வகை எறும்புகள் பன்னிரண்டு முறை கொட்டினால் அது இறந்துவிடும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

# விஞ்ஞான விளக்கங்கள்

**1. ஆய்வுகூடத்தில் சோடியத் துண்டுகள் மண்ணெண்ணெயில் இட்டுப் பாதுகாக்கப்படுவது ஏன்?**



சோடியம் வளியுடனும் நீருடனும் விரைவாகத் தாக்கம் புரியக்கூடியது. ஆனால், மண்ணெண்ணெய் நீருடனும் வளியுடனும் தாக்கம் புரிவதில்லை. அதனால், சோடியம் மண்ணெண்ணெயில் இட்டுப் பாதுகாக்கப்படுகிறது.

**2. கண் இமைகள் அடிக்கடி மூடிக்கொள்வது ஏன்?**



கண் இமைகளிலுள்ள தசைகளில் அதிகமான சுருக்கங்கள் காணப்படுகின்றன. இதன் காரணமாகவே இமைகள் அடிக்கடி மூடிக்கொள்கின்றன.

ஏ.எப்.அப்ரா,
ஹ/கிரிந்தை மு.ம.வித்., கிரிந்தை.




# இரண்டு பாறைகள்



ஒரு காட்டில் இரண்டு பெரிய பாறைகள் அருகருகே கிடந்தன. பல வருடங்களாக ஒரே இடத்தில் மழையில் ஊறி, வெயிலில் வாடிக் கிடப்பது அந்தக் கற்களுக்கு மிகவும் சலிப்பை ஏற்படுத்தியது. ஒருநாள் அவை 'நாம் எப்போதாவது இங்கிருந்து நகர்வோமா?' என்று மிகவும் ஏக்கத்தோடு பேசிக்கொண்டன. அந்தக் காட்டின் அருகே ஒரு நகரம் இருந்தது. அங்கிருந்த மக்கள் அனைவரும் சேர்ந்து ஒரு கோவில் கட்டத் தீர்மானித்தார்கள். புதுக் கோவிலுக்கு மூலவர், உற்சவர், ஏனைய சிலைகள் எல்லாவற்றையும் தெரிவுசெய்ய ஏழெட்டு சிற்பிகள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் சிற்பங்களைச் செதுக்குவதற்கான கற்களைத் தேடிக் காட்டுக்குள் வந்தார்கள்.


அவர்களில் ஒரு சிற்பி இந்தப் பாறைகளைக் கவனித்தார். மற்றவர்களிடம் அவற்றைக் காண்பித்துச் சொன்னார். "இந்தப் பாறைகள் இரண்டும் சரியான அளவில் இருக்கின்றன. நாளைக்கே இவற்றைத் தூக்கிக்கொண்டு போய்விடலாம்!" என்றார்.

சிற்பிகள் திரும்பிச் சென்ற பிறகு முதல் பாறை "ஆ... ஹா.... மிகவும் மகிழ்ச்சி. எமது பல நாள் கனவு நிறைவேறப் போகிறது! நாளைக்கு நாம் நகரத்துக்குப் போகிறோம்....!" என்றது. அதற்கு இரண்டாவது பாறை கோபமாகச் சீறியது. " மடையனே! அவர்கள் உனக்கு நகரத்தைச் சுற்றிக்காட்டுவதற்கா கூட்டிக்கொண்டு போகப்போகிறார்கள் அங்கு உன்னை அடித்து உடைத்து செதுக்கி சிலையாக மாற்றப்போகிறார்கள் தெரியுமா?" என்றது. அதற்கு முதல் பாறை "என்ன செய்வது? ஒன்றைப் பெற வேண்டுமெனில் இன்னொன்றை இழந்துதான் ஆகவேண்டும். நான் வலியைப் பொறுத்துக்கொள்வேன் பிரச்சினையில்லை" என்றது. "என்னால் அது முடியாது என்று தீர்மானமாக சொல்லிவிட்டது இரண்டாவது பாறை".

'நாளை அவர்கள் வரும்போது நான் இன்னும் ஆழமாகப் போய் அமர்ந்துகொள்வேன். அவர்கள் அனைவரும் சேர்ந்து எவ்வளவுதான் கஷ்டப்பட்டாலும் என்னைத் தூக்கவே முடியாது போய்விடும்'' என்று தொடர்ந்து கூறியது. மறுநாள் அந்தச் சிற்பிகள் வந்தார்கள். முதல் பாறையைக் கட்டித் தூக்கி வண்டியில் வைத்தார்கள். இரண்டாவது பாறையை அவர்களால் அசைக்க முடியவில்லை. அது ஆழமான பகுதியில் போய் நின்றுகொண்டது. இதனால், முதலாவது பாறை நகரை நோக்கி மகிழ்ச்சியுடன் பயணித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல.143




### மேலிருந்து கீழ்

01. விண்வெளி செல்லப் பயன்படுவது.
02. தானிய வகையொன்று.
03. கிணற்றிலிருந்து நீர் அள்ளவும் பயன்படும்.
05. அறுசுவைகளில் ஒன்று.
08. சதி - எதிர்பாற்சொல். (தலைகீழ்)
09. கடல்.
10. பருவ காலங்களில் ஒன்று.

### இடமிருந்து வலம்

01. அறிஞன்.
04. சுவாசிக்கத் தேவை.
06. இருக்கை.
07. மீன்பிடிக்கப் பயன்படும் சாதனங்களில் ஒன்று. (மாறியுள்ளது)
08. ஒன்றுக்கு மேற்பட்டதைக் குறிக்கும் சொல். (மாறியுள்ளது)
10. கொக்கரிக்கும் பறவை.
11. மனிதனின் அத்தியாவசியத் தேவைகளில் அடங்கும்.
12. பழங்காலத்தில் தூதுவிடப் பயன்படுத்தப்பட்ட பறவையினம். (மாறியுள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி இல.142 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 தி | ரா | ட் | 2 சை | | 3 த |
| ர | | | 4 கை | ப் | பு |
| 5 வீ | ற | 6 கு | | | தா |
| 7 ய | 8 ம | ன் | | 9 தி | 10 ர |
| ம் | | ற | | 11 வா | ன் |
| | 12 கு | ம் | ப | ன் | |

## பழங்களின் பெயர்களைப் பொருத்தமான படத்துடன் இணைக்க

- Mango
- Avocado
- Kiwi
- Fig
- Grape
- Blueberry
- Grapefruit
- Strawberry




## குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து, சரியான சொல்லை எழுதுக









## எத்தனை உள்ளன?




## அறிவுக்கு விருந்து (17.06.2015) விடைகள்








## பிழை எங்கே...?

- இப்படத்தில் 11 பிழைகள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து X அடையாளமிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானத்தின் விந்தைகள்

சிலர் விஞ்ஞானப் பாடத்தினை விரும்புவதில்லை. இன்னும் சிலர் விஞ்ஞானப் பாடத்தின்மீது அபரிதமான ஆர்வம் கொண்டவர்களாக இருப்பர். ஆனால், விஞ்ஞானம் என்பது மிகவும் சுவாரஸ்யம் மிக்க ஒரு பாடமாகும். ஆர்வம் இருந்தால் மட்டுமே, இந்த சுவாரஸ்யத்தினை நீங்கள் அடைய முடியும்.

நாம் பாடங்களைப் கற்பது என்பது, பரீட்சையை இலக்காகக் கொண்டதாகவே அமைகின்றது. எனினும், பரீட்சைக்காக மட்டுமன்றி, நமது அறிவுத்திறனை விருத்திசெய்துகொள்ளும் ஆர்வத்துடன் பாடங்களைக் கற்பது எப்பொழுதுமே நம் வாழ்க்கைக்கு உதவுகின்றது. அவ்வாறு நாம் கற்கும் விடயங்கள் என்றும் நினைவில் நிலைபெற்றிருக்கும். அவை மறந்துவிடுமே என்று அஞ்சவும் தேவையில்லை. விஞ்ஞானம் என்பது புதுமையானது; விந்தைமிக்கது. அந்த விந்தை தொடர்பான உண்மைகள் தொடர்பாக சற்று நோக்குவோம்....



## பலூன்களில் ஒலிபெருக்கி இருக்கின்றதா?

பல வர்ணங்களிலான நிறங்களைக் கொண்ட பலூன்களைக் கண்டால், உடனே ஊத ஆரம்பித்து விடுகின்றோம். ஊதிய அந்த பலூனைத் தட்டிப்பார்த்தால் ஒலிபெருக்கியைப் போன்று அதிரும். இங்கு பலூனின் உள்ளே காற்று மட்டுமே நிரம்பியுள்ளது. அவ்வாறாயின், அது எப்படி அதிர்வடைகின்றது? இந்த கேள்விக்கான விடையை தேடும்போது, இவ்வாறான பதில் கிடைத்தது. அதாவது, பலூனும் ஒலிபெருக்கியைப் போன்றதுதான். இந்த ஒலி வாங்கி சாதனத்தினைப் பயன்படுத்தி மெல்லிய சத்தத்தினைக்கூட பெரிய சத்தமாக மாற்றமுடியும்.



### அது எப்படி என்கிறீர்களா?

இந்தக் கேள்விக்கான விடையை அறிவதற்கு உங்களுக்குத் தேவை ஊதிய பலூனொன்று மட்டுமே. இந்தப் படிமுறைகளைப் பின்பற்றுங்கள்.

* முதலில் பலூனை ஊதி, அதனுள் காற்றினை நிரப்பிக் கொள்ளுங்கள்.
* நன்கு ஊதப்பட்ட பலூனை உங்கள் காதின் அருகாமையில் வைத்துக் கொண்டு, பலூனின் அடுத்த பக்கத்தில் விரல்களினால் மெதுவாகத் தட்டுங்கள்.



### என்ன நடக்கின்றது?

நீங்கள் மெதுவாக பலூனைத் தட்டினாலும், உங்களது காதுக்கு அது பெரிய சத்தமாகவே கேட்கும். பலூனை ஊதும்போது, காற்றுத் துணிக்கைகள் மிகவும் நெருக்கமாக பலூனுக்குள் செல்கின்றன. இந்த காற்றுத் துணிக்கைகள் மிகவும் நெருக்கமாகக் கோர்வையாக இருப்பதனால், நம்மைச் சூழவுள்ள காற்றினைவிட, அது சிறந்த ஒலி அலைவெளிப்பாட்டு அமைப்பாக மாறுகின்றது. இதுதான் அந்த ரகசியம்.

## நீங்களும் பாடசாலை செய்தியாளர் ஆகலாம்

விஜய் பத்திரிகைக்கு பாடசாலை செய்தியாளர்கள் மற்றும் பாடசாலை புகைப் படப் பிடிப்பாளர்கள் தற்போது சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். மாணவர்களாகிய நீங்களும் பாடசாலை செய்தியாளர் ஆக விரும்பினால், எழுத்துத் திறமை உள்ளவர்களும் புகைப்படம் பிடிப்பதில் வசதிகளும், திறமையும் உள்ளவர்களும் பாடசாலை அதிபரின் அனுமதியுடன் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

முழுமையான பெயர், பாடசாலை பெயர், பாடசாலை தொ.பே. இல, வீட்டுத் தொ.பே.இல அல்லது [கைப்பேசி], மாவட்டம், நகரம், தாய், தந்தை பெயர் மற்றும் விசேட திறமைகள் ஆகிய விபரங்களை குறிப்பிட்டு நீங்களே தயாரித்த விண்ணப்பப் பத்திரமொன்றை எமக்கு அனுப்பி வையுங்கள்.

முகவரி:
பாடசாலை செய்தியாளர்/
படப்பிடிப்பாளர்
'விஜய்'
த.பெ.இல - 2037,
கொழும்பு.



# ஓமான்

இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் நிறைந்த இடத்தில் அமைந்துள்ள ஓமானில் சுல்தான்களின் ஆட்சி 18 ஆம் நூற்றாண்டில் ஆரம்பமானது. பிற்காலத்தில் பிரித்தானியர்களால் நிர்வகிக்கப்பட்டாலும் குடியேற்ற நாடாக அது இருக்கவில்லை. தற்போதைய சுல்தானாகிய பபுஸ் பின் சேயித் அல் சேயித் தனது தந்தைக்குப் பின் 1970 இல் ஓமானின் ஆட்சியாளரானார். மத்தியகிழக்கு வலயத்தில் ஓமான் மிகவும் அமைதியான நாடாகவும் திகழ்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகில் பிரபல்யமானவர்கள்



# சேர்.சி.வி.இராமன்


இந்தியாவில் அந்நாளில் இருந்த குறைவான வளங்களைப் பயன்படுத்தி பௌதிகத்துறையில் 'இராமன் விளைவு' என்ற கோட்பாட்டைக் கண்டுபிடித்து நோபல் பரிசு பெற்றவர்தான் சேர்.சி.வி.இராமன்.

இவர், 1888 இல் தமிழ்நாடு திருச்சிராப்பள்ளியில் பிறந்தார். தனது 12 ஆவது வயதில் மற்றிக்குலேசன் பரீட்சையில் சித்தியடைந்தார். இவருடைய 16 ஆவது வயதில் B.A. பரீட்சையில் சித்தியடைந்தார். தான் பயின்ற கல்லூரியான பிளாசிடென்சிக் கல்லூரியில் முதல்தரத்தில் இப் பரீட்சையில் சித்தியடைந்தவர் இவர் ஒருவரே. அதே கல்லூரியில் M.A. பௌதீகத்தில் சித்தியடைந்து முன்னைய சாதனைகளையெல்லாம் முறியடித்தார். 1914 இல் கல்கத்தாவில் விஞ்ஞானக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டபோது,இராமன் அதன் தலைவராக நியமிக்கப்பட்டார். 1921 இல் கல்கத்தா பல்கலைக்கழகத்தால் விஞ்ஞானக் கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டது. 1924 இல் லண்டன் பல்கலைக்கழக 'Fellow of the Royal Society London' ஆகத் தெரிவுசெய்யப்பட்டார். 1928 இல் இந்திய விஞ்ஞானக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். 1929 இல் இந்தியாவின் பிரித்தானிய அரசு இவருக்கு 'சேர்' பட்டம் வழங்கிக் கௌரவித்தது. 1938 இல் இருந்து 1948 வரை பெங்களூரிலுள்ள இந்திய விஞ்ஞானக் கழகத்தின் பணிப்பாளராக விளங்கினார். 1948 'இராமன் ஆராய்ச்சி நிறுவனம்' இவரால் நிறுவப்பட்டது. அங்கேயே இவர் தனது மிகுதி வாழ்நாளையும் கழித்தார்.

இவர் நீரினூடாகவும் பனிக்கட்டியூடாகவும் வேறு பல ஊடகங்கள் ஊடாகவும் சூரியக் கதிர்களைச் செலுத்திப் பல வித்தியாசமான ஆராய்ச்சிகளைத் தொடர்ந்தார். மேலும், வித்தியாசமான ஊடகங்களினூடாகச் சூரியக் கதிர்களைச் செலுத்தி திரவங்களின் அடர்த்தியைக் கண்டுபிடிக்கும் முறையைக் கண்டறிந்தார். இக் கண்டுபிடிப்பு 'இராமன் விளைவு' (Raman effect) என வழங்கப்படுகிறது. இதற்காக 1930 இல் பௌதீகத்திற்கான நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது. 1954 இல் உயர் விருதான 'பாரத ரத்னா' விருதை வழங்கி இந்தியா கௌரவித்தது.

-ஜுனைட் எம்.பஹ்த்

## ஓவியம் வரைவோம்



## அலிபாபாவும் 40 திருடர்களும்

07 கதை, ஓவியம்: வேணு வாரியத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாலின் ஸ்பைக்கின் பயன்களைப் பெறுவோம்

'மாலின் ஸ்பைக்' என்பது சாரணராகிய உங்களுக்கு புதிய விடயமாக இருக்கக் கூடும். ஆனால், திறந்த வெளி செயற்பாடுகளில் இந்த உபகரணம் உங்களுக்கு மிகவும் பயன்மிக்கதாகவே அமையும்.

மாலின் ஸ்பைக்கை பயன்படுத்தும் விதம்




## முடிச்சிட உதவும்

இதனை மிகவும் கிரமமாக கயிறு அல்லது நூலினுள் செலுத்துவதன் மூலம் வழுக்காத மாலின் முடிச்சினை உருவாக்கிக்கொள்ள முடியும். இங்கு மாலின் முடிச்சினை உருவாக்கிக்கொள்ளும் முறை பற்றி காட்டப்பட்டுள்ளது.

## தேய்ப்பதற்கு உதவும்

முடிச்சினை தேய்ப்பதற்கு, பிரிந்த முடிச்சினை இணைப்பதற்கு முடிச்சுகளை கயிற்றுக்குள் செலுத்த வேண்டிய நிலை ஏற்படக்கூடும். இவ்வேளை, முடிச்சுகளை வேறுபடுத்துவது இலகுவான விடயம் அல்ல என்பதனை சாரணர்களாகிய நீங்கள் அறிவீர்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் தேய்ப்பதனை சரிவரச் செய்வதற்கு இந்த மாலின் ஸ்பைக் உபகரணத்தினைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

## இறுகிவிட்ட முடிச்சினை நெகிழ்வுபடுத்த உதவும்

இறுகிவிடும் முடிச்சினை நெகிழ்வுபடுத்துவதற்கு (அவிழ்க்க) பொறுமையற்ற சாரணர்கள் அந்தக் கயிற்றினை வெட்டி எறிவதனைக் காணலாம். சாரணர்கள் ஒருபோதும் அவ்வாறு செய்யக்கூடாது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் இறுகிவிட்ட முடிச்சினை நெகிழச் செய்ய இந்த உபகரணத்தினைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். இறுகிய முடிச்சினுள் இந்த உபகரணத்தினை நுழைத்து இறுக்கத்தினைத் தளர்த்திக்கொள்ள முடியும்.

# சட்டைப் பையில் எடுத்துச் செல்லக்கூடிய பலவித பயன்பாடு கொண்ட கோடரி







தற்போது சாரணர்கள் பயன்படுத்தும் உபகரணங்கள் மிகவும் இலகுவான தன்மை கொண்டவையாக உள்ளன. இந்தவகையில், ஒரு உபகரணத்தினைப் பயன்படுத்தி பலவிதமான பயன்களைப் பெறக்கூடியதாக உள்ளது. இங்கு அவ்வாறான ஒரு விடயம் பற்றியே குறிப்பிடப்படுகின்றது.

சாரணர் கோடரியுடன் தொடர்புபடுத்தப்பட்ட உபகரணங்கள் பலவற்றுடன் கத்தியல், குறடு போன்ற பலவிதமான உபகரணங்களையும் உருவாக்கிக்கொள்ள முடியும். பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இந்த உபகரணத்தினை மிகவும் இலகுவாக எடுத்துச் செல்லவும் முடியும். சாரணர்கள் தற்போது காலத்திற்கு ஏற்ற மாற்றத்தினை ஏற்க வேண்டிய நிலையில் உள்ளனர். இதன்படி உங்களது பிரயாணப் பையினையும் பலவித உபகரணங்களை எடுத்துச் செல்லும் பல பயன்பாடு கொண்ட சாதனமாக மாற்றிக்கொள்ள முடியும்.

# மரக்கட்டை ஒன்றினை வெட்டிப் படிக்கட்டு இடுங்கள்

நாற்சதுர முடிச்சு, வட்ட முடிச்சு இடும்போது, மற்றும் கயிற்றினை வழுக்காமல் கட்டும்போது படிக்கட்டு முறையின்மூலம் அவற்றை ஆரம்பித்து செய்ய முடியும். முடிச்சு இடும் பொருள் தொடர்பில் சாரணராகிய நீங்கள் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். முடிச்சிடும் கட்டையை உரியவாறு பொருத்தி வைத்துக்கொள்ளல் வேண்டும். கீழே அதற்கான உதாரணங்கள் காட்டப்பட்டுள்ளன. இரண்டு கட்டைகள் ஒன்றையொன்று தொடர்புபடுத்தப்பட்டுள்ளதுடன், அவை தொடர்புறும் இடம் சரிவர இணைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கட்டைகள் சரிவரப் பொருத்தப்பட்டு பிணைக்கப்படும்போது, அதன்மூலம் பயன்பாடும் சிறந்த மட்டத்தில் இருக்கும்.







# போத்தல் படகில் வலம் வருவோம்

எந்தவொரு சாரணராலும் மேற்கொள்ளக்கூடிய இந்த செயற்பாட்டினை கூட்டுச் செயற்பாடாக ஏற்பாடு செய்துகொள்ள முடியும். இங்கு காட்டப்பட்டுள்ள போத்தல் படகினை உருவாக்குவதற்கு சாரணர் எண்மர் பங்குபற்றியுள்ளனர். படகின் வடிவம் மற்றும் நிர்மாணப்பணிகளுக்குப் பொறுப்பாக ஒரு சாரணரை நியமித்தல் வேண்டும். உண்மையில் அந்த சாரணர் படகு நிர்மாணிப்பு தொடர்பாகவும் கேத்திரகணித ரீதியில் படகுகளை வடிவமைப்பது தொடர்பிலும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். படகின் சமநிலையைப் பாதுகாத்தல், நீரின் மீது செலுத்துதல் மற்றும் பயணத்திற்கான பணிகளைத் தெரிவுசெய்தல் ஆகியவை தொடர்பில் அவருக்கு பொறுப்புகள் உண்டு. இங்கு அவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ள போத்தல் படகு குறித்த தகவல் ஒன்றே தரப்பட்டுள்ளது.






**தேவயானவை:**

- வெற்று மென்பானப் போத்தல்கள் 250
- போத்தல்களை ஒட்டுவதற்கு உகந்த பசை வகை
- போத்தல் படகினை உருவாக்குவதற்கான திட்டவரைபு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தில் ஓடக்கூடிய ரயில்கள் எத்தகையதாக இருக்கும்? என்ற கேள்வி எம்மில் எழுவது இயற்கையே. இத்தகைய 'ட்ரெய்ன்' 'train' எனும் ஆங்கிலச் சொல்லுக்கு 'ரயில்' என்ற rail ஆங்கிலச் சொல்லே இன்றும் இந்தியாவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும், புகையிரதம் எனும் தமிழ்ச்சொல் இன்று எவ்விதத்திலும் பொருத்தமற்றதாகவே உள்ளது. இன்று மட்டுமல்ல அன்றும் பொருத்தமற்றதாகவே இருந்தது. ஏனெனில், அன்றைய புகையிரதம் புகையைக் கக்கிக்கொண்டு பயணித்தாலும், அது புகைமூலம் இயங்கவில்லை. நிலக்கரியை பயன்படுத்தி ஏற்படுத்திய நீராவிச் சக்தியாலேயே அவை இயங்கின.



இதுதான் இன்சிபிரோ சுரங்கப் புகையிரதம். செலுத்துவதற்கு ஓட்டுனர் இல்லை. எரிபொருளைச் சேமிக்கும் உயர் சொகுசு வசதிகளைக் கொண்டது. ஒக்டோபர் 8 ஆம் திகதி லண்டனில் மக்களின் பார்வைக்காக இது காட்சிப்படுத்தப்படும்.


# வியப்பூட்டும் சுரங்கத் தொடர் ஊர்தி



அண்மையில் ஊடகத்துறையினருக்கு காட்சிப்படுத்தப்பட்ட விதம்

## செலுத்துனர் அவசியமில்லை

சொல்லின் அர்த்தத்தில் பிழை இருந்தாலும் எமக்கு புகையிரதம் என்ற சொல்லைப் பயன்படுத்தியே ஆகவேண்டும். எரிபொருள் சிக்கனம் நிறைந்ததும் செயற்றிறன் மிகுந்ததும், சொகுசு வசதிகள் பல கொண்டதும் மிகச் சொற்ப [அள]விலான புகையை



வெளியிடக்கூடியதும் காற்றைக் கூட வெளிப்படுத்தாத வியப்பூட்டும் அற்புதமான சுரங்கப் புகையிரதம் ஒன்று தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் பேராச்சரியம் என்னவென்றால், இந்தப் புகையிரதத்தைச் செலுத்த ஓட்டுனர் ஒருவர் அவசியம் இல்லை என்பதே.

இங்கிலாந்தின் லண்டன் நகரத்து சுரங்கப் புகையிரதத்திற்குப் பதிலாக பயன்படுத்தப்படும் புத்தம் புதிய சுரங்கப் புகையிரதத்தை 'inspiro' இன்ஸ்பிரோ என்று அழைக்கின்றனர். லண்டனில் விக்டோரியா டொக்ஸ் டி கிறிஸ்டலில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள கண்காட்சியில் இப்புகையிரதத்தைப் பார்வையிடலாம்.

## ஜெர்மனியின் பின்புலம்


ஜெர்மனியில் தலைமையகத்தைக் கொண்டு உலகெங்கும் விரிவடைந்துள்ள சீமன்ஸ் பொறியியல் நிறுவனம்தான் இந்த எண்ணக்கருவுக்கு பின்புலமாக உள்ளது. அடுத்த தலைமுறைக்கான சுரங்கப் புகையிரதம் என இது அழைக்கப்படுகின்றது. லண்டன் நகர மேயர் அனுமதி வழங்கினால் இந்த புதிய சுரங்கப் புகையிரதத்தை பிரித்தானியாவிலேயே பொருத்தி வழங்க அந்த நிறுவனம் ஆயத்தமாக உள்ளது.

## நிறையில் குறைந்தது

இது நூற்றுக்கு முப்பது வீதமான மின்சக்தியை மிச்சப்படுத்துகிறது. அதுமட்டுமல்ல இப்பொழுது பாவனையில் உள்ள புகையிரதத்தைவிட, நூற்றுக்கு 20 வீதம் நிறையும் குறைந்தது. பெட்டிகள் எல் ஈ டி முறையின்படியே ஒளியேற்றப்பட்டுள்ளது. கதவுகள் மிகவும் அகன்றதாக அமைக்கப்பட்டுள்ளதால் பயணிகள் அதிகமாக ஏறி இறங்கும் வேளையிலும் நெரிசல் ஏற்படாது. ஏறவோ, இறங்கவோ முண்டியடிக்கத் தேவையில்லை.

ஓட்டுனர் ஒருவர் இதற்கு அவசியமில்லை என்பதும் இதன் மற்றுமோர் சிறப்பம்சமாகும். பிரித்தானிய அரசின் புதிய கொள்கையின்படி, லண்டன் சுரங்கப் போக்குவரத்து குறித்து ஒரு நிபந்தனை விதித்துள்ளது. பிரித்தானியாவில் அமைக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றில் தயாரிக்கப்பட்டால் மாத்திரமே இது தொடர்பாக உடன்படிக்கை செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால், இந்த சுரங்கப் புகையிரதப்பாதை அந்நாட்டிலேயே தயாரிக்க வேண்டும். அதன்படி பிரித்தானியாவில் அமைந்துள்ள சீமான்ஸ் நிறுவனம் அதனை செயற்படுத்தும்.

- இரஞ்சித் ஜெயகர்



வழங்கப்பட்டிருக்கும் சொகுசு வசதிகளைப் பார்த்த மாத்திரத்திலேயே புரிந்துகொள்ளலாம்




கதவுகள் விசாலமாக இருப்பதால் நெரிசலான வேளையிலும் சிரமமின்றி ஏறலாம்




இந்தப் புகையிரதம், லண்டன் வாழ் மக்களின் மனதை வெகுவாகக் கவரும் என சீமன்ஸ் நிறுவனம் எதிர்பார்க்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார கார்ட்டூன் படம்




# நகம் வெட்டும்போது வலிப்பதில்லை...



நம் கை-கால் விரல்களில் வளரும் நகங்கள், எமது உடலின் ஒரு பகுதியாக கருதப்பட்டாலும், வளரும் நகங்களுடன் எமது உடலிலுள்ள இரத்த நாளங்களுக்கோ, குறுத்தெலும்புகளுக்கோ எந்தவொரு தொடர்பும் இல்லை. இதனால், நரம்புகளுடனான தொடர்பும் இல்லையாம்! எனவேதான், வளர்ந்த நகங்களை வெட்டும்போது எமக்கு வலிப்பதில்லை.




நாள், வாரம், மாதம், வருடம் என அனைத்தையும் அறியத் தரும் நாட்காட்டி, எமது வாழ்நாட்களில் பல்வேறு வகையிலும் பயன்படுகின்றது. இதனை ஆங்கிலத்தில் 'Calendar' என்று அழைப்பர். இது 'Calendae' என்னும் ரோமானிய மொழிச் சொல்லில் இருந்து உருவானதாகும். ரோமானிய மொழியில் 'Calendae' என்றால் 'மாதத்தின் முதல் நாள்' என்று அர்த்தப்படுகின்றது. லத்தீன் மொழியில் இதற்கு 'கணக்குப் புத்தகம்' என்று பொருள். 1582 இல் 'பதிமூன்றாம் க்ரெகரி' என்ற பாதிரியாரே, தற்போதளவில் உலகில் பெரும்பாலும் பாவனையிலுள்ள க்ரெகரியன் நாட்காட்டி (Gregorian calendar) உருவாகக் காரணமாக இருந்துள்ளார். இன்றளவில் காகிதத்தில் அச்சிடப்படும் நாட்காட்டிகளே, உலகில் பெருமளவில் பாவனையிலுள்ளன. இது தவிர, இலத்திரனியல் மற்றும் கணினிசார்ந்த நாட்காட்டிகளும் பாவனைக்கு வந்துள்ளன.

# 'நாட்காட்டி'

## அறிந்ததும் அறியாததும்

### நாட்காட்டி பற்றிய சுவாரஸ்யங்கள் சில...

- பப்புவா நியூ கினியா நாட்டு மக்கள் குறிப்பிட்ட சில காலம் வரை நாட்காட்டி முறை பற்றி அறியாமல் இருந்துள்ளனர். ஒவ்வொரு கிறிஸ்மஸ் காலத்திலும் கடற்கரைக்கு முட்டையிட வரும் ஆமைகளை வைத்தே, அவர்கள் தங்கள் வயதைக் கணக்கிட்டுக் கொண்டுள்ளனர்.



- பழங்கால ரோமானியர்கள் தமது வீடுகளில் நாட்காட்டியை தொங்கவிட மாட்டார்கள். ஒவ்வொரு மாதப் பிறப்பன்றும் ஊர்ப் பணியாளர்கள்தான் வீதிகளுக்குச் சென்று புது மாதப் பிறப்பை அறிவிப்பார்களாம்!




- பழங்காலத்தில், கிரேக்க நாட்டவர்கள் ஒரு வாரத்திற்கு பத்து நாட்களென்றும், ஒரு மாதத்திற்கு மூன்று வாரங்கள் என்றும் கணக்கிட்டு வந்துள்ளனர்.






# கண்களே...!

- கண்கள் இருந்தும் பார்வைப்புலன் இல்லாத உயிரினம் 'வௌவால்'.
- தேனீக்களால் புறஊதாக் கதிர்களைப் பார்க்க முடியும்.



- கருவில் முதன்முதலாக உருவாகும் உறுப்பு 'கண்' ஆகும்.
- டொல்ஃபின்கள் கண்களைத் திறந்தபடியே தூங்கும்.
- பறவைகள் எப்போதும் ஒரு கண்ணை மட்டுமே மூடியவாறு தூங்குகின்றன.
- வண்டுகளுக்கும் முயலுக்கும் கண் இமைகள் கிடையாது.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2015, ஜூலை 01 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday July 01, 2015.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org